எத்திரப் பாண்டி யெனவைய மேற்கு மிறைவன்மதிக்
கோத்திரப் பாண்டிய னுகிமண் ணுண்டவன் கோலநரைக்
காத்திரப் பாண்டின் மறைக்கா டனைமலக் காயமென்னுஞ்
சூத்திரப் பாண்டி லிறுமிறுங் காணுந் தொழுமுன்னமே.

(இ-ள்.) இரப்பு ஆண்டியென ஐயம் ஏற்கும் எத்து இறைவன் - இரத்தல் செய்யும் ஆண்டியாகப் பிச்சைகொண்டருளிய யாவருந் துதிக்கப்பெற்ற கடவுள், மதிக்கோத்திரப் பாண்டியன் ஆகி மண் ஆண்டவன் - சந்திரவமிசத்திற்குரிய பாண்டியனுகத் திருவுருக்கொண்டு பூமியைப் பரிபாலித்தவர், கோல நரைக் காத்திரப் பாண்டில் மறைக்காடனை - அழகிய வெண்மையான பெரிய இடபவாகனத்தை யுடைய திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்கின்ற இச்சிவபெருமானை, மலக்காயம் என்னும் சூத்திரப் பாண்டில் இறும் இறும் முன்னமே தொழுங்காணும் - மலத்தால் நிரம்பப்பெற்ற இச்சரீரமாகிய சூத்திரச் சகடமானது விரைவில் இற்றுவிழும் ஆதலால் அவ்வாறு விழுவதற்கு முன்னமே வணங்குமின்.

(ந-கை.) அடுக்கு விரைவு குறித்து நின்றது. காணும் அசை.()

முன்னுவ லாரிசை யுங்கூடற் சங்கர் முதியவெள்ளை
நன்னுவ லாரியன் மாமறைக் காடர் நயங்கொள்பச்சை
மின்னுவ லாரி வரைக்காண வேண்டும் விழிசதப்பத்
தென்னு வலாரி படைத்தா னவைபு மிமைப்பிலவே.

(இ-ள்.) முன் நாவலர் இசையும் கூடற்சங்கர் - பூர்வத்திலே புலவர்கள் கூடிய மதுரை முச்சங்கத்திலும் தாமுமொரு புலவராய் வீற்றிருந்தவர், முதியவெள்ளை நல் நாவலார்-பழைய வெண்மையாகிய சிறந்தநாவல் விருட்சத்தினடியில் எழுந்தருளியவர்; இயல் மா மறைக் காடர் - அழகிய பெருமைபொருந்திய திருமறைக்காடர், நயங்கொள் பச்சை மின் ஆவலார் - அன்புபொருந்திய பசுமையாகிய மின்னற்

கொடியை ஒத்த உமாதேவியாரிடத்தே விருப்பத்தினையுடையார், இவரைக் காணவேண்டும் விழி வலாரி சதப்பத்து என்னுப் படைத்தான் - இவரது திருக்கோலத்தைத் தரிசனம் பண்ணுகிறதற்கு வேண்டுங் கண்கள் (இரண்டமையாதெனத்) தேவேந்திரன் ஆயிரமாகப்பெற்ருன், அவையும் இமைப்பில எ - அக் கண்களும் (பார்த்தமையாமையால்) இமையாதிருக்கின்றன.

(கு-ரை.) இயல் என்பதற்கு இயற்றமிழ் வழங்கும் எனினும் பொருந்தும். (சுடு)

இமையாத வம்பகர் சூழ்மறைக் கானத் திறைவகங்கைச்
சுமையா தவம்பக வன்செயச் சென்னி துளக்கரனே
கமையா தவம்பகல் வீசிய வாரிதிக் காசினியோ
ருமையா தவம்பக ரார்வேட னெச்சிலை யுண்டதற்கே.

(இ-ள்.) இமையாத அம்பகர் சூழ்மறைக் கானத்து இறைவ- இமையா நாட்டமுடையவர்களாகிய தேவர்கள்சூழுந் திருமறைக் காட்டீசரே, கங்கைச் சுமையா - கங்கையைத் தாங்குகின்றவரே, பகவன் தவஞ்செயச் சென்னி துளக்கு அரனே-பிரமன் தவஞ்செய்ய (மகிழ்ந்து) சிரக்கம்பம் செய்தருளியவரே, பகல் ஆதவம் வீசிய வாரிதிக் கமைக் காசினியோர்-சூரியன் வெயிலினை வீசுகின்ற கடலாற் சூழப்பெற்ற பொறையினையுடைய பூமியிலுள்ளோர், வேடன் எச்சிலையுண்டதற்கு உமை யாது அவம் பகரார் - வேடராகிய கண்ணப்ப நாயனர் எச்சிலை நீர் உண்டதற்கு உம்மை என்ன குற்றஞ் சொல்லார்கள்!

(கு-ரை.) உமையென்பது ஒருமையிற் பன்மை. காசினியோருமை என்றதற்குக் காசினியோரும் ஐயனே எனப் பொருள் கூறினுமாம். வீசிய காலவழுவமைதி. பொறுமையாகிய வெயில் பகலில் வீசப்படுகின்ற கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தோர் எனப் பொருள் கூறில், பொறுமை யுயிர்களுக்கேயன்றி வெயிற்கின்மையானும் பொருட்சிறப்பின்மையானும் அவ்வுரை பொருந்தாமையுணர்க. (சுசு)

உண்டலத் தானையன் பின்வந்த வண்டின மூதுந்துழாய்க்
கொண்டலத் தானைய னஞ்சுடர் மூன்றையுங் கொண்டமுக
மண்டலத் தானையன் கொண்டாடும் வேத வனத்தன்சிறு
கண்டலத் தானையன் றீருரி வாங்குங் கருணையெற்கே.

(இ - ள்.) உண்டு - உளதாம், அலம் தானையன் பின் வந்த வண்டினம் ஊதும் துழாய்க் கொண்டல் அத்தான் - கலப்பைப் படையினையுடைய பலராமனுக்குப் பின் அவதரித்த வண்டுக் கூட்டங்கள் ஒலிக்கின்ற துளவமாலையைத் தரித்த திருமாலுக்கு மைத்துனர் என்னும் முறையினை யுடையாரும், சுடர் மூன்றையும் நயனம் கொண்ட முக மண்டலத்தான் - சோமசூரியாக்கினி என்னும் முச்சுடர்களையும் (மூன்று) கண்களாகக் கொண்டருளிய திருமுகமண்டலத்தினையுடையாரும், அயன் கொண்டாடும் வேதவனத்தன் - பிரமனாற் புகழப்பெறும் திருமறைக்காடரும், சிறு கண் தலத்த ஆனை ஈர் உரி அன்று வாங்கும் கருணை எற்கு ஏ - சிறிய கண்ணினையுடைய யானையை உரித்த தோலினை (போர்வையாகக்) கொண்டவருமாகிய சிவபெருமானது கருணை எனக்கு.

(ந-வை.) எனக்கு உளதாம் எனக் கூட்டுக; இது பூட்டுவிற் பொருள்கோள். கையைக் கைத்தலம் என்றாற்போலக் கண்ணைக் கண்டலம் என்றார். வாங்கும் என்னும் பெயரெச்சம் வாங்குவோன் எனப் பெயராய் நின்றது; "பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையில்" என்னுந் திருக்குறளில் ஒழுகுவோனது ஆண்மை என்றாற்போல. ஆனை யீருரிவாங்குங் கருணை என்பதற்கு யானையிலுரித்த தோலைக் கொண்ட கிருபை என்பது உரையன்மையாமாறுணர்க. (சுஎ)

எற்பதங் கன்று வளர்சோம னங்கி யிவர்செய்கையாய்
நிற்பதங் கன்று திருமறைக் காட னிறைவைகுந்த
நற்பதங் கன்று நிரைமேய்த்த வற்கரு ளுதன்பெண்பாற்
சிற்பதங் கன்று மெனச்சென்ற தூதன் செயல்வண்ணமே.

(இ-ள்.) எல் பதங்கள் தூ வளர் சோமன் அங்கி இவர் செய்கையாய் அன்று நிற்பதன்று - ஒளியானது சூரியனும் தூய்மை மிக்க சந்திரனும் அக்கினியும் ஆகிய முச்சுடர்களது செயலாய் (அவைகளால் விளக்கமுறும்) உலகத்தில் நிற்பதன்று, திருமறைக்காடன் - திருமறைக்காடரும், இறை - இறைவரும், வைகுந்த நற்பதம் கன்று நிரை மேய்த்தவற்கு அருள் நாதன் - வைகுண்டமாகிய நல்ல பதவியைக் கன்றுகளையும் பசுக்களையும் மேய்த்தவனாகிய திருமாலுக்குக் கொடுத்தருளிய முதல்வரும், பெண்பால் சிற்பதம் கன்றுமெனச் சென்ற தூதன் செயல் வண்ணம் ஏ - பரவையாரிடத்து ஞானமே வடிவாயுள்ள திருவடி வருந்துமென்றும் வண்ணம் சென்ற தூதருமாகிய சிவபெருமானது செயல்வண்ணமாய் நிற்பதாம்.

(கு-ரை.) சிவபெருமானுடைய திருமேனியி னொளியே முச்சுடர்களுக்கும் ஒளியினைத் தருதலால் உலகத்தில் ஒளி நிலைபெற்று நிற்பது அச்சிவபெருமான் செயலேயன்றி முச்சுடர்கள் செயலன்றென்பது கருத்து. இதனைத் "தேயமா ரொளிகளெல்லாஞ் சிவனுருத் தேசதென்னோர்" என்னுந் திருவாக்கானு முணர்க. முதலாவது அடியில் தூ என்பது து எனக் குறுகிநின்றது. எல் என்பதனை எழுவாயாகக்கொள்ளாது முச்சுடர்களுக்கு அடையாக்கின், இவர் செய்கையாய் நிற்பதன்று, தூதன் செயல் வண்ணமாய் நிற்பது எனக் கூறும் ஒருமை வினைகளுக்கு எழுவாயின்றி அவ்வுரை வழுவாமாறு காண்க. (கஅ)

வண்ணவெண் கண்ணன் மறையா ளுறைமறைக் காடிறைவர்
இன்னவெண் கண்ணனு மதமாத் திரியுஞ் சிலம்பதம்பு
வண்ணவெண் கண்ண னனையே நிதம்ப முயர்சுருபி
பண்ணவெண் கண்ணன் மனையே முகநண்ப பைங்கொடிக்கே

(இ-ள்.) வண்ண வெண் கண் நல் மறையாள் உறை மறைக்காட்டு இறைவர் - அழகிய வெண்மையான கண்ணையுடைய நல்ல நாமகளுடன் விளங்கும் பிரமன் வழிபடப்பெற்ற திருமறைக்காடுடையராகிய

திண்ணி என்கு அண்ணல் மதமாத் திரியும் சிலம்பு அகம் - வலிய கரடிகளும் பெருமையிற் சிறந்த மதயானைகளும் சஞ்சரிக்கின்ற மலை இடமாம், பூ உண்ண என் கண்ணன் அணையே நிதம்பம் - பூமியை உண்ண எண்ணுந் திருமாலினது சயனமாகிய அரவமே அல்குலாம், உயர் பண்ண சுருதி என் கண்ணன் மனையே முகம் கண்ப பைந்தொடிக்கு எ - உயர்ந்த பண்ணையுடைய வேதத்தை யுணர்ந்த பிரமனது மனையாகிய தாமரைமலரே முகம் ஆம், கண்பனை, பசிய வளையலை யுடையாளுக்கு.

(கு-ரை.) இஃது இவ்விடத் திவ்வியற்றென்றல். (கக)

தொடிப்பாணி நித்திரை யாகாளென் காதிற் றுளைக்குமட்டோ
கொடிப்பா ணினித்தில தென்னும் விழுமெழு கோமிப்பிவாய்
வெடிப்பாணி நித்தில மையோ சுடுமென்னும் வேதவன
முடிப்பாணி நித்தியப் பெம்மான் பவனி முறையிற்கண்டே

(இ-ள்.) தொடிப்பாணி நித்திரை ஆகாள் - வளையலைத் தரித்த கையினையுடைய சுமது பெண் துயில்கொள்ளாள், என் காதின் துளைக்குமட்டோ கொடிப்பாண் இனித்திலது என்னும் - என் செவித் துளைக்கு மாத்திரமோ பாடுகின்ற இசை இனிக்கவில்லை என்பள். விழும் - விழுவள், எழும் - எழுவள், கோம் - துன்பமுறுவள, இப்பி வாய் வெடிப்பாணி நித்திலம் ஐயோ சுடுமெனும் - சிப்பி வாய் பிளந்துமிழ்ந்த ஆணிமுத்தும் ஐயோ என்னைச் சுடுகின்றதென்பள், வேதவன முடிப்பாணி நித்தியப் பெம்மான் பவனி முறையிற்கண்டு எ - திருமறைக்காட்டி லெழுந்தருளிய முடியிற் கங்கையைத் தரித்த நித்தியராகிய பெருமானது திருவுலாவைச் செவ்வே தரிசித்து (மயங்கி).

(கு-ரை.) என் காதிற் றுளைக்குமட்டோ என்பதற்கு என் காதைத் துளைக்குமளவோ அதனினும் விஞ்சியதெனக் கூறும் உரை, [illegible]

னுமா, அவன் கேட்டலே யன்றிப் பார்க்குமன்பினள் அல்லளென்பது பெறப்படுதலானும் பொருந்தாமையுணர்க. இது தலைவி வருத்தம் தாயுரைத்தது. (எ0)

கண்டங் கடுத்த விராமாலை வேதன் கழிந்ததலை
முண்டங் துத்த மிசைந்திடும் வானின் முளைத்தபிறைத்
துண்டங் கடுத்த நுதலிமை யாசலத் துய்யபச்சைப்
பெண்டங் கடுத்தது பார்மறைக் காட்டுறை பேரொளிக்கே.

(இ-ள்.) கண்டம் கடுத் தவிரா - கண்டத்தினிடத்தே ஆலாகல விடம் நீங்காது, மாலை வேதன் கழிந்த தலை முண்டங்கள் - தரித்துங் கொள்ளும் மாலையோ பிரமனது உடலினின்று கழிந்த தலைகளாம், வானில் முளைத்த துத்தம் இசைந்திடும் பிறைத்துண்டம் கடுத்த நுதல் - ஆகாயத்திலே தோன்றுகின்ற பால்போலும் வெண்மைநிறமுடைய பிறைச்சந்திரனை யொத்த புருவத்தினையுடைய, இமய அசலத் துய்ய பச்சைப் பெண்டு அங்கு அடுத்தது - இமயமலையிற் பிறந்த சிறந்த பசியநிறமுள்ள பார்வதியாராகிய பெண் மனையாளாகப் பொருந்திற்று, மறைக்காட்டு உறைபேர் ஒளிக்கு ஏ - திருமறைக்காட்டிலெழுந்தருளிய பெரியசோதி வடிவாயுள்ள சிவபிரானுக்கு, பார் - இத்திருக் கோலத்தைத் தரிசிப்பாயாக.

(கு-ரை.) துத்தம் இசைந்திடும் வானின் என்பதற்குத் துத்தம் போல நீல நிறம்பொருந்திய வானின் எனினுமாம். தலைமுண்டம் ஒரு பொருட்பன்மொழி. அங்கு ஏ அசைகள் (எக)

ஒளியா னிறையுந் திவாகரக் கண்ண னுலகத்துயி
ரளியா னிறையுந்தி யம்புயன் வேதற் கருஞ்சின்மய
வெளியா னிறையுந்தி முந்நீர் மறைசையில் வெற்பணங்கே
தெளியா னிறையுந் திகைத்தங் கிரேன்வந்து சேருவனே.

(இ-ள்.) ஒளியால் நிறையுந் திவாகரக் கண்ணன் - ஒளியினாலே நிறையப்பெற்ற சூரியனாகிய கண்ணினையுடையார், உலகத்து உயிர்

அளி நின் இறை உந்தி அம்புயன் வேதற்கு - உலகத்துயிர்களைக் காக்கின்ற பசுக்களுக்குத் தலைவனும் நாபிக்கமலத்தை யுடையவனுமாகிய திருமாலுக்கும் பிரமனுக்கும், அருஞ் சின்மய வெளியான் - காண்டற்கரிய சிதாகாச வடிவினையுடையார், இறை உந்தி முந்நீர் மறைசையில் வெற்பு அணங்கே - (இவாது) பெருமைபொருந்திய சுழிகளையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த திருமறைக்காட்டினது மலையில் வசிக்கும் பெண்ணே, யான் இறையும் திகைத்துஅங்கு இரேன் வந்து சேருவன் தெளி- யான் சற்றும் மயங்கி அவ்விடத்துத் தாமதித்திரேன் (விரைவிலிங்கு) வந்துசேருவேன் இதனை நீ தெளிவாயாக.

(து-றை.) இது பிரிவுணர்ந்த தலைவியைத் தேற்றல். (எஉ)

சேருவ ரிக்கடை யாளமி லாவுருச் சித்தசர்போ
லாருவ ரிக்கடை யேநிற்ப ராலணங் கேசெழும்பூந் தா
தாரு வரிக்கடை பண்பாடும் வேதத் தலந்திறைமுந்
நீருவ ரிக்கடை வெங்காள போசன னீண்மலைக்கே.

(இ-ள்.) இக்கு அடையாளம் இலா உருச் சித்தசர்போல் சேருவர் - கருப்புவில்லின் அடையாளம் ஒழிந்த அழகிய மன்மதனை ஒத்து (நஞ்சிறார்க்கண் வந்து) சேருவர், இக் கடையே நிற்பர் ஆல்அணங்கே உவர் ஆர் - இந்த நமது கடைத்தலையில் (வருந்தி) நிற்பர் தெய்வப் பெண்ணினை யொப்பாய், அவர் யார்?, செழும்பூந்தாரு வரிக்கடை பண் பாடும் வேதத்தலத்திறை - செழித்த பூமரங்களில் வண்டுகள் இசை பாடப்பெற்ற திருமறைக்காட்டில் எழுந்தருளியவரும், முந்நீர் உவரிக் கடை வெம்காளபோசனன் - முந்நீர் ஆகிய கடலிற்றோன்றிய விடத்தையுண்டருளியவருமாகிய சிவபிரானது, நீள்மலைக்கு ஏ-நீண்ட மலையினிடத்தே.

(து-றை.) இது குறை நயப்பித்தல். (எங)

நீண்ட வராக மலைமா நிலங்கண்டி நின்றறியா
ணைண்ட வராக மலைனுந் தான்மறை நற்பதியான்

மாண்டவ ராக வலையாமல் வைப்பவன் வான்புகழை
வேண்ட வராக மலைக்குமுன் றோன்றும் வெறுந்தௌவையே.

(இ-ள்.) நீண்டவராகம் அலைமாநிலம் கிண்டி நின்று அறியான் - பெரிய வராகமாகிய திருமால் சமுத்திரஞ் சூழ்ந்த பூமியைப் பிளந்து சென்றும் அறிதற்கரிய திருவடியையுடையார், நாண் தவராக மலை குனித்தான் - நாணினையுடைய வில்லாக மேருமலையை வளைத்தவர், நல் மறைப்பதியான் - நல்ல திருமறைக்காடென்னும் திருப்பதியையுடையார், மாண்டவர் ஆகம் அலையாமல் வைப்பவன் - தமது பதியில் இறந்தோரை (எழுவகைத் தோற்றமாகிய) உடல்களோடு கூடி வருந்தமுற்றலையாமல் (சாரூபந் தந்து முத்திக்கண்) வைப்பவர், வான்புகழை வேண்ட - (இவரது) மேலாயபுகழை வேண்ட, கமலைக்குமுன் தோன்றும் வெறுந்தௌவை வாரா - இலக்குமிக்கு முன்பிறந்த வறிய மூதேவி வாராது.

(ந-ரை.) ௪-ம் அடியில் வாரா என்பது தவ்விகுதி குறைந்துநின்றது. மாண்டவராக மலையாமல் வைப்பவன் என்பதற்கு மாட்சிமைப்பட்ட தவத்தர்களது காயத்தை அலையாமல் வைப்பவர் எனப்பொருள் கூறுவாருமுளர். மாயைமுதலிய மலங்களை ஒழித்து முத்தியைத் தந்தருளுமிறைவர்க்கு அம் மாயாகாரியமாகிய காயத்தை அலையாமல் வைப்பது கூடாமையின் அஃதுரையன்மையாமாறுணர்க. (௭௪)

வெறும்பத்தி நிச்சய மில்லேனை யாட்கொண்டு வீட்டில்வைப்
புறும்பத்தி னிற்பத்து மாமகன் மாலய னும்பருக்கு [பா
மெறும்பத்தி நிற்குங் கடைமுதலானி யெவைக்குமருள்
பெறும்பத் தினிபங்க னேமறைக் கானப் பொருங்கடலே.

(இ-ள்.) பத்தி நிச்சயம் இல் வெறுமையேனை - பத்தியும் உறுதியும் இல்லாத வறியேனை, ஆட்கொண்டு வீட்டில் வைப்பாய் - அடிமைகொண்டு முத்திக்கண் வைத்தருளும், பத்தினிற்பத்து உறும் மாமகன் மால் அயன் உம்பருக்கும் - நூறு பெரிய யாகத்தைச் செய்த இந்திர

னுக்கும் திருமாலுக்கும் பிரமனுக்கும் தேவர்களுக்கும், அந்நிமுதலை எறும்புடைய நிற்கும் ஆவி எவைக்கும் அருள் - அந்நிமுதல் எறும்பு ஈறாகப் பொருந்திய மற்றச் சீவகோடிக்ளெவற்றிற்கும் அருளுகின்ற, பத்தினி பெறும் பங்கனே - உமாதேவியாரைப்பெற்ற பாதித்திருமேனியையுடையவரே, மறைக்கானப் பெருஞ்சுடரே - திருமறைக்காட்டி லெழுந்தருளிய பெரியசோதி வடிவினரே!

(கு-ரை.) இல்லேனை என்பதின் விகுதியையும் உருபையும் பிரித்து வேறுமையென்னும் பண்போடு கூட்டப்பட்டது. (௭௫)

பெருங்கா சினித்தலங் கொண்டாடி யாடிப் பிறங்குகங்கை
யருங்காசி நித்த முறைவோர் மறைசை யமலர்வெற்பின்
மருங்கா சினித்தலை கொள்ள விடாதென மார்பகத்தே
பருங்காசி னித்தகைப் பூண்கொங்கை மங்கைக்குப் பாரித்த [தே

(இ-ள்.) பெருங் காசினித்தலம் கொண்டாடி ஆடிப் பிறங்குகங்கை - பெரிய உலகில் உள்ளார் துதித்து நீராடப்பெற்று விளங்கும் கங்கைநதி சூழ்ந்த, அருங்காசி நித்தம் உறைவோர் - அரிய காசியாகிய திருப்பதியில் நித்தியமாய் வசித்தருளுவோர், மறைசை அமலர் - திருமறைக்காட்டில் எழுந்தருளிய நிருமலர், இவரது, வெற்பின் - மலையினிடத்தே, மருங்கு இனி ஆசு தலைகொள்ள விடாது என - இடையை இனிச்சிறிதுந் தலை எடுக்கவிடாது என்னும் வண்ணம், மார்பு அகத்தே பருங்காசின் பூண் கொங்கை இத்தகை மங்கைக்குப் பாரித்தது - மார்பினிடத்தே பெரியமணிகளாலாகிய ஆபரணத்தை யணிந்தனமான து இவ்வழகினையுடைய பெண்ணுக்குப் பாரித்துச் செவ்வி யடைந்தது.

(கு-ரை.) இது பருவங்கூறி வரைவுகடாதல். (௭௬)

பாரிக்க மார முலையுமை யாட்கும் பகீரதியா
ளாரிக்கு மாயப் புரமூன் சிரமு நயந்தளித்தான்

ஸூரிக் குமாரனைத் தந்தான் மறைசையின் மூர்த்திதந்தான்
தாரிக்கு மாரனுக் கில்லையென் மேற்பகை சாதிப்பதே.

(இ-ள்.) பாரிக்கும் ஆர முலை உமையாட்கும் பகீரதியாம் நாரிக்கும் - பருத்த முத்துவடங்களை அணிந்த முலையினையுடைய உமாதேவியாருக்கும் கங்கையாகிய பெண்ணிற்கும், ஆரப் புரமும் சிரமும் நயந்து அளித்தான் - பொருந்துமாறு பாதித்திருமேனியினையும் திருமுடியினையும் முறையே அன்போடு தந்தருளினார், ஸூரிக் குமாரனைத் தந்தான் - வலிய முருகக்கடவுளைப் பெற்றவர், மறைசையின் மூர்த்தி - திருமறைக்காட்டி லெழுந்தருளிய சிவபெருமான், தார் தந்தான் - (இவர்) எனக்குக் கொன்றைமாலை தந்தருளினார்; ஆதலால், இக்கு மாரனுக்கு என்மேல் பகைசாதிப்பது இல்லை ஏ - கருப்புவில்லினையுடைய மன்மதனுக்கு என்மேற் பகைசாதிப்பது இனி இல்லையாய் ஒழியும்.

(கு-ரை.) இது மாலையைப்புகழ்தல். (எஎ)

சாதிப்ப ராகம மென்பயன் வேட்டுவன் சாதிப்புழு
வேதிப்ப ராகம் பெறல்போல மெய்க்குரு வாற்பெற்றியான்
பூதிப் பாராக மணிந்தன்ப னாவதெப் போதருளா
யாதிப் பராகவி னென்மறைக் கானத்தெண் ணம்புயனே.

(இ-ள்.) ஆகமம் சாதிப்பர் பயன் என் - (அனுபவஞானமின்றி) ஆகமத்தைச் சாதிப்பர் அதனாற் பயன்யாது?, வேட்டுவன் சாதிப்புழு வேதிப்பு அராகம் பெறல்போல - வேட்டுவன் என்னும் அளியானது உயர்வாகிய புழுவைக் கூட்டினிடத்தே வைத்து ஊதுதலினால் அது பொன்னிறமடைதல்போல, மெய்க் குருவாற் பெற்று யான் பூதி பராகம் அணிந்து அன்பன் ஆவது எப்போது - உண்மைஞானத்தைச் சற்குருவால் உபதேசிக்கப்பெற்றுத் திருவெண்ணீற்றைத் தரித்து உம் மடியவனாக யான் ஆவது எக்காலம்?, அருளாய் - அருள்செய்வீராக, ஆதிப் பரா - ஆதியாகிய கடவுளே, கவின் ஏன் மறைக் கானத்து எண் அம்புயனே - அழகுபொருந்திய திருமறைக்காட்டினிடத் தெழுந்தருளிய எட்டுப் பயங்களையுடையவரே!

(கு-ரை.) வேதிப்ப ராசம் எனப் பிரித்துப் பொருள் கூறுதலு முண்டு. (எ௪)

புயற்கூடு போம்பொழில் வேதா ரணியன்பொன் னாட்டகத்தே
மயற்கூடு மாடவர் நாரிய ராருயிர் வாரியுண்ணு [தே
முயற்கூடு தாக்க விருற்கூ டுடையு முடிச்சிலம்பா
கயற்கூடு கண்ணிடை யாகாசந் தீட்டுதல் கைக்கரிதே

(இ-ள்.) புயற்கு ஊடு போம் பொழில் வேதாரணியன் பொன் நாட்டகத்தே - மேகமண்டலத்தினூடே செல்லும் சோலைகள் சூழப்பெற்ற திருமறைக்காடாது அழகிய நாட்டினிடத்தே, மயற்கு ஊடும் ஆடவர் நாரியர் ஆர் உயிர் வாரி யுண்ணும் முயற்கூடுதாக்க-காமத்தாற் பிணங்குகின்ற மைந்தர் மங்கையரது அரிய உயிரை அள்ளியுண்ணும் சந்திரன் மோதுதலினாலே, இறற்கூடு உடையும் முடிச் சிலம்பா - தேனடைகள் உடைகின்ற சிகரம் பொருந்திய மலையினை உடைய தலைவனே, கூடு கயல் கண் இடை ஆகாசம் தீட்டுதல் கைக்கு அரிதே - காதினைக்கூடும் சேற்கெண்டையை யொத்த கண்ணினையுடைய தலைவியின் இடையாகிய ஆகாச வடிவத்தை எழுதுதல் உமது கைக்கு அரிதாம்.

(கு-ரை.) கயற்கூடுகண் அன்மொழித்தொகை. இது தலைமகள வயவத்தருமை சாற்றல். (எ௫)

அரிதிரி கைக்கு வடுவாழ மறைசை யானவறுமை
பெரிதிரி கைக்குவந் தாண்டான்மெய்ஞ் ஞானம் பிறங்குசுடா
விரிதிரி கைக்கு வினையே னிடத்தில் விளங்குமடசக்
கிரிதிரி கைக்கு நிகராம் பிறப்புங் கெடுவிப்பனே.

(இ-ள்) அரிதிரிகைக்குவடு வாழ் மறைசை அரன்-சிங்கங்களுஞ் சஞ்சரிக்கும் யானைகளும் (பகையின்றி) வாழப்பெற்ற திருமறைக் காட்டிலெழுந்தருளியிருக்கின்ற சங்காரகருத்தர், பெரிது வறுமை

இரிகைக்கு வந்து ஆண்டான்-எனது பெரிதாகிய அறிவின்மை நீங்குமாறு வந்து என்னை ஆட்கொண்டருளியவர், பிறங்கு மெய்ஞ்ஞானம் விரிசுடர் - விளங்குகின்ற மெய்ஞ்ஞானமாகிய கிரணங்கள் விரிந்த சூரியனையுள்ளார், திரி கைக் கு வினையேனிடத்தில்-மாறுபட்ட ஒழுக்கத்தினையுடைய தீவினையேனிடத்தில், விளங்கும் மட் சக்கிரி திரிகைக்கு நிகர் ஆம் பிறப்பும் கெடுவிப்பன் ஏ - விளங்குகின்ற மட்பாத்திரம் செய்யும் குயவனது சக்கரத்தை யொத்து மாறிமாறி வரும் பிறப்பினையும் கெடுத்தருளுவர்.

(கு-ரை.) கை - ஒழுக்கம். கு - தீமை, பாபம். மெய்ஞ்ஞானச்சுடர் விரிதிரி யெனப்பிரித்து, மெய்ஞ்ஞான விளக்கில் விரிந்த திரியானவர் எனப் பொருள்கூறுவாருமுளர். அவ்வுவமை சிவத்து வியாபகமுற்ற பாசபசுக்களிலொன்றை யுணர்த்துமாகலின் அது பொருளன்று என்க. மெய்ஞ்ஞானச்சுடர் விரியெனக்கொண்டு கூட்டி, மெய்ஞ்ஞானச் சுடரின் விரிவேயென்று கூறினும் அமையும். (௧௦)

கெடுப்போ னகந்தையை நான்முகன் கேசவ னார்க்கு முண்போன், கடுப்போ னகந்தையற் பங்கின்வைத் தான் மறைக் கானுவந்தா, னடுப்போன கந்தை யுடையான் சிலம்பின மாதையொப்பாய். வடிப்போ னகந்தை மணிமலை நின்குறை மற்றிலையே.

(இ-ள்.) நான்முகன் கேசவனார்க்கும் அகந்தையைக் கெடுப்போன் - நான்கு முகத்தினையுடைய பிரமனுக்கும் திருமாலுக்கும் அகந்தையை நீக்கியருள்பவர், கடுப் போனகம் உண்டோன் - ஆலாகலவிடமாகிய உணவை யுண்டவர், தையல் பங்கின் வைத்தான் - உமாதேவியாரைப் பாதித் திருமேனியில் வைத்தவர், மறைக்கான் உவந்தான் - திருமறைக்காட்டில் மகிழ்ந்துறைவோர், கந்தைபோனது உடையான் - ஆடை நீங்கிய இடையினையுடைய நிம்பர், இவனது, சிலம்பில் கம் மாதை ஒப்பாய் - மலையினிடத்தே வாழும் எமது

தலைவியை (உருவத்தால்) ஒத்திருக்கின்றனை, நகம் . தை மணி முலை வடு நின்குறை மற்று இலை-நகம் தைத்த அழகிய முலையினிடத்துள்ள வடுவே நினக்குக் குறையாம் வேறு (குறை) இல்லை.

(கு-ரை.) ௪-ம் அடியில் போல், ஏ அசை. இது தலைவரோடு புணர்ந்து வந்த தலைவியைத் தோழி வேறுபடுத்துக் கூறி நகையாடல். (௮௧)

மற்றலத் தேரைய மின்றிநெஞ் சேயென்ன மாயங்கொல்லோ
முற்றலத் தேரை விடுஞ்சாலிற் சங்க முழங்குபண்ணைப்
பொற்றலத் தேரை மறைமறைக் கானப் புனிதன்கல்லுட்
பற்றலத் தேரைக்கு மேயளந் தானெனப் படிப்படியே.

(இ-ள்.) நெஞ்சே - (பிழைப்பிற்கு ஓர் வழியுமில்லையே யெனச் சலனமுறுகின்ற) மனமே, என்னமாயம் கொல் ஓ - என்னமாயம், ஏரை விடு முற்று அலந்துச் சாலிற் சங்கம் முழங்கு பண்ணை - ஏரினை யோட்டுகின்ற விளைந்த பணைச்சாலிற் சங்குகள் ஒலிக்கும் வயல் சூழ்ந்த, பொற்றலத்து ஏரை மறை மறைக்கானப் புனிதன் - பொன்னுலகத் தழகினையும் (தன்னொளியால்) மறைக்குந் திருமறைக்காட்டி லெழுந்தருளிய சிவபெருமான், கல் உட் பற்று அலத்தேரைக்குமே படி அளந்தான் - கல்லின் உள்ளிடத்தமைந்த தேரைக்கும் படியளந் தருளினார், எப்படி - அது எப்படியோ அப்படியே நமக்கும் படியளப் பாரேயன்றி, மற்று அல - வேறல்ல, ஐயம் இன்றித் தேர் - இதனைச் சந்தேகமின்றித் தெளிதி.

(கு-ரை.) எப்படி என்றதனால் அப்படியே என்பதும் தேரைக்குமே படியளந்தாரென்றதனால் நமக்கும் படியளப்பரென்பதும் அவாய் நிலைப்பற்றி வருவித்துரைக்கப்பட்டன. கொல், ஓ, ஏ, அசை. "கல்லுட் பற்றுதலாகிய அத்திறத்தையுடைய தேரைக்குமே எவ்வண்ணம் படியளந்தார். இது யாது மாயமோ? சங்கையின்றி யறிதி. அதற்குணவு கொடுப்பது பிறிது யாதொரு வழியாலுமன்று" என்றும் உரை பொருளியைபு இன்மையிற் பொருந்தாதென்றுணர்க. (௮௨)

படிகந் தனையனை யான்மறைக் காடன்பொற் பாணியில்வேல்
பிடிகந் தனையரு டாதைய னாடகப் போவனைக்
கடிகந் தனைமுகில் காணுனை யேத்தக் கருதுநெஞ்சே
விடிகந் தனைய மடவார் கலக விழிமையலே.

(இ-ள்.) படிகந்தனை யனையான்-படிகத்தினையொத்த திருமலர், மறைக்காடன்-திருமறைக்காடர், பொன் பாணியில் வேல்பிடி கந்தனை அருள் தாதையன் - அழகிய கையினிடத்து வேலைத்தாங்கிய முருகக் கடவுளைப் பெற்ற பிதா, ஆடகப் போவனைக் கடி கந்து அனை முகில் காணுனை - இரணியனைக் கொல்லும் (நாசிங்கமாகித்) தூணாகிய தாயினிடத்துப் பிறந்த மேகம்போன்ற திருமாலாற் காணப்படாதவர், இவரை, நெஞ்சே ஏத்தக்கருது - மனமே துதிக்க எண்ணுவாயாக, அனைய மடவார் கலக விழி மையல் இகந்துவிடு எ - நீ விரும்பிய அத்தன்மையையுடைய பெண்களது துன்பத்தையுண்டாக்கும் விழியினாலாகும் காமமயக்கத்தை ஒழித்து விடுவாயாக.

(கு-ரை.) தாதையன் என்பதில் அன் பகுதிப்பொருள் விகுதி. விடு என்பதில் முற்றுகரங்கெட்டது. (அ௩)

மையகற் றானை முகன்றாதை மாணிக்க வாசகனு
மெய்யகற் றானை மகிழ்மறைக் காடனை வேண்டியுன்னுஞ்
செய்யகற் றானைமுக் கோலந்த ணீர்சுரஞ் சென்றனரோ
துய்யகற் றானைப் புரந்தானன் றனுநந் தோகையுமே.

(இ-ள்.) மை அகற்று ஆனைமுகன் தாதை-விக்கினங்களைப்போக்கியருளும் யானைமுகக் கடவுளுக்குப் பிதாவாகியவரும், மாணிக்க வாசகனும் மெய்ய கற்றானை மகிழ் மறைக்காடனை - மாணிக்கவாசகராகிய உண்மைப் பொருளுணர்ந்த திருத்தொண்டரை மகிழ்ந்துகொண்டருளிய திருமறைக்காடருமாகியவரை, வேண்டி உன்னும் செய்ய கற்றானை முக்கோல் அந்தணீர்-விரும்பித் தியானிக்கின்ற சிவந்த க

காவி தோய்ந்த ஆடையினையும் திரிதண்டத்தையுமுடைய வேதியரோ சுரம் சென்றனரோ - சுரத்துப் போயினரோ ?, தூய்ய கன்று ஆனைப் புரந்தான் அன்னாளும் நந்தோகையும் ஏ - பரிசுத்தமாகிய கன்றுப்பசுக் களைக் காத்த திருமாலையொத்த ஓர் தலைவனும் எங்கள் பெண்ணும்.

(கு-ரை.) சுற்று வலித்தல் விகாரம். இது வேதியரை வினாதல்.()

தோகையிர் ஆமன் மதபாண மங்கந் துளைத்ததுகா
ரீகை யிராமன் விதிகற்ப மானதென் மீதிற்சற்று
மோகை யிராமன் மறந்தா ரிராவண னுட்கவென்ற
வாகை யிராமன் பணிமறைக் காடர்வந் தாரிலையே.

(இ-ள்.) தோகையிர் ஆ மன்மதபாணம் அங்கம் துளைத்தது-மங் கையர்களே, ஆ ! மன்மதனுடைய பாணங்கள் என்னுடலைத் துளைக் கின்றன, கார் ஈகை இரா மன் விதிகற்பம் ஆனது - இருளினைத் தரு கின்ற இராவோ நிலைபெற்ற பிரமனது கற்பம்போல நீண்டு விடிகின்ற தில்லை, என்மீதிற் சற்றும் ஓகை இராமல் மறந்தார் - என்மீதிற் சிறி தும் அன்பின்றி மறந்தவராகி, இராவணன் உட்கவென்ற வாகை இராமன் பணிமறைக்காடர் வந்தாரிலை - இராவணன் மடியச்செயித்த வெற்றியினையுடைய இராமனாற் பணியப்பெற்ற திருமறைக்காட்டீசர் வந்தனரில்லை.

(கு-ரை.) மறந்தார், முற்றெச்சம். இஃது இரவினீட்டத்துத் தலைவிவருந்தல். (அ௰)

வந்தித்திக் குங்கணை யுங்கொண்ட வேள்பணி மான்குழற்கா
டுந்தித்திக் குங்கனி வாயும்வெண் மூரலு மொண்குழையும்
பந்தித்திக் கும்பெறத் தோன்றிய வேதப் பதியன்பொற்று
ளந்தித்திக் குந்தகு மென்ன மன்றாடு மான்கிரிக்கே.

(இ-ள்.) வந்தித்து இக்கும் கணையும் கொண்ட வேள்பணிமான்- வணங்கி [illegible] கணைகளையுமுடைய [illegible]

மன்மதனும் பணியத்தக்க மான்போன்றவளது, குழற்கற்றும் தித்திக்கும் கனிவாயும் வெண்மூரலும் ஒண்குழையும் - கூந்தற்செறிவும் மதுரமான கனியையொத்த வாயும் வெண்மையாகிய பற்களும் ஒளிபொருந்திய காதும், பந்தித் திக்கும் பெறத் தோன்றிய - வரிசையாய் (யான் காணப்பெறுமாறு) எத்திக்கினும் தோன்றுகின்றன, பொற்றாளம் தித் திக் கும் தரும் என்ன மன்றூடும் அரன் வேதப்பதியன் கிரிக்கு ஏ - பொற்றாளம் தித் திக் கும் தருமென்னப் பொன்னம்பலத்தில் ஆடுகின்ற சங்காரகருத்தராகிய திருமறைக்காடரது மலையினிடத்தே.

(துறை.) இஃது உருவெளித்தோற்றம். (அசு)

அரம்பையங் காட்டக வேதா ரணியத்த னாவியச்சுக்
குரம்பையங் காட்டவல் லான்சித்த சித்தன் குரூஉச்சடில
கிரம்பையங் காட்ட வணிந்தோ னரவிந்தச் சேவடியன்
பரம்பையங் காட்ட வெரிமுன்பஞ் சாகப் பறந்திடுமே.

(பொ-ள்.) அரம்பை அம் காட்டக வேதாரணியத்தன் - வாழைகளின் அழகிய வனத்தினிடத்தேயுள்ள திருமறைக் காட்டையுடையார், ஆவி அச்சுக் குரம்பை அங்கு ஆட்டவல்லான் - உயிரினையுடைய உடலாகிய கூட்டை (வினைப்பயனை நுகர்தற்குரிய) அவ்வவ்விடங்களில் ஆட்டவல்லவர், சித்து அசித்தன் - சித்தாயும் அசித்தாயும் உள்ளவர், குரூஉச்சடில கிரம்பையங் காட்ட அணிந்தோன் - (செந்) நிறம்பொருந்திய சடாமகுடத்தில் கங்கையைக்காட்டும் வண்ணந் தரித்துள்ளார், இவரது, அரவிந்தச் சேவடி அன்பர் பயம் - தாமரை மலர்போலும் செவ்விய திருவடிக்கு அன்பினையுடையாரது பயமானது, காட்டஎரி முன் பஞ்சு ஆகப் பறந்திடும் - விறகிற்பற்றிய அக்கினியின்முன் பஞ்சுபோல விரைவில் ஒழியும்.

(கு-ரை.) ௪-ம் அடியில் அம் சாரியை. சேவடியென் பரம் எனப் பாடங்கொண்டு சேவடி எனக்கு முத்தித்தானமாயித்து எனக் கூறுவாருமுளர். அதான்றிச் சேவடியெனக்கும் பரமாயிற்றெனப் பொரு

ளகூறின் மலங்களாகிய பாரத்தை ஒழிக்குந் திருவடி பாரமாய பதம் வாறென்க. ஆவியென்னும் பதத்தைத் தனியேபிரித்து உயிருக்குயி ராய் நிற்பவரெனக் கூறலுமொன்று. (௮௭)

பறக்கும் பருந்துவங் குங்கழி யூன்மூடைப் பற்றுளதா
யிறக்கும் பருந்துவக் காக்கையை நீக்கி யினிப்பொதிய
வறக்கும்ப ருந்து தமிழ்மறைக் காட னருளைக்கொண்டு
திறக்கும்ப ருந்துதித் தற்கரி தாமுத்தி சிக்கதவே.

(இ-ள்.) பறக்கும் பருந்து உவக்கும் கழிமுடை ஊன் பற்று உள தாய் - பறக்கின்ற பருந்து (உணவாக) மகிழும் முடை நாற்றத்தினை யுடைய மாமிசப்பற்றுள்ளதாகி, இறக்கும் பருந்து உவக்கு ஆக்கையை நீக்கி - அழிகின்ற பெரிய தோல் மூடிய சரீரத்தை ஒழித்து, இனிப் பொதிய அறக் கும்பர் உந்து தமிழ்மறைக்காடன் அருளைக்கொண்டு - இனிமேல் பொதிய மலையில் வசிக்கின்ற புண்ணியவடிவம் ஆகிய கும் பத்துத் தோன்றிய அகத்தியமுனிவர் உயர்த்திய தமிழ்வழங்கும் திரு மறைக்காடர் அருளால், உம்பருந் துதித்தற்கு அரிது ஆம் சீர் முத்திக் கதவு திறக்க ஏ - தேவர்களுந் துதித்தற்கு அரிதாகிய சிறப்பினையுடைய முத்திக்கதவுகளைத் திறப்பீர்களாக.

(கு-ரை.) திறக்க என்பதில் அகரம் தொகுக்கப்பட்டது; திறக்கு எனப் பிரித்து திறப்பேன் எனினும் ஆம். (௮௮)

கதவாயு நீரங்கி மண்காய மான கடவுளென்னை
யுதவாயு மப்பனு மானவன் வேத முறைவனத்தான்
பதவாயு தக்கொடி வேடாதை கீர்த்தியைப் பாடுதற்குச்
சதவாய நாவங்கக் தானில்லை வாணி கலைமகளே

(இ-ள்.) மண் நீர் அனல் கதவாயு காயம் ஆன கடவுள் - நிலமும் நீரும் நெருப்பும் வேகமுடைய காற்றும் ஆகாயமும் ஆகிய கடவுள், [illegible] ஆயும் அப்பனும் ஆனவன் - என்னைப்பெற்ற மாதாவும்

பிதாவுமாயுள்ளார், வேதம் உறை வனத்தான் - வேதம் வசிக்கின்ற திருமறைக்காடர், பத ஆயுதக்கொடி வேள் தாதை - காலினை ஆயுத மாகப்பெற்ற கோழிக் கொடியினையுடைய முருகக்கடவுளின் பிதா, இவரது, கீர்த்தியைப் பாடுதற்கு - புகழை யான்பாடித் துதிக்கும்பொ ருட்டு, வாணி தலைமகன் சதவாயும் நாவும் தந்தானில்லை - சரசுவதி நாயகனான பிரமன் நூறு வாயினையும் நூறு நாக்கினையும் படைத்தா னில்லை. (அகூ)

மகா சலந்தா ளந்தரு வேத வனத்தன்புய
சிகா சலந்தா னுவியுண் டானடல் சேர்ந்திலங்கு
முகா சலந்தர வாலாச னுவுரி யங்கையொற்றைப்
புகா சலந்தாப் போர்த்தா யெனவினை பொன்றிடுமே.

(இ-ள்.) மகாசலம் தாளம்தரு வேதவனத்தன்-மகரமீனையுடைய கடல் முத்தினைக்கொழிக்கும் திருமறைக்காட்டினை யுடையவராகியும், புய சிகா சலந்தான் ஆவியுண்டான் - புயமலையினையுடைய சலந்தரன் என்னும் அசுரனுடைய உயிரை வாங்கியவருமாகிய சிவபெருமானே, அடல் சேர்ந்து இலங்கும் - வலிமைபெற்று விளங்கும், அரவு அரசு அலந்து உகு ஆல அசனு - வாசுகியென்னும் அரவாசன் (அமிர்தங் கடைகையில்) வருத்தமுற்றுக் கக்கிய விடத்தினை யுண்வாகக் கொண் டருளியவரே, ஒற்றை அம் கைப் புகர் அசலம் உரி தாப் போர்த்தாய்- ஓர் அழகிய துதிக்கையினையும் கபில நிறத்தினையுமுடைய யானை தோலினைத் தா அதனைப் போர்த்தவரே, என வினை பொன்றிடும் ஏ - என்று துதிக்க நமது கன்மபந்தம் கெட்டொழியும்.

(வி-ரை.) அரவாசலந்தரு எனற்பாலது எதுகைபற்றி உகரசலந் தரவு என நின்றது. அடல்சேர்ந்திலங்கு முகாசலந்தா வாலாசனு என் றதற்கு "வலிமைபொருந்தி விளங்காநின்ற உகரமென்னப்பட்ட வயி த்தைக்கொண்ட வாலபோசனரே" என்னும் உரை [illegible] மென்றுணர்க. அன்றியும் உகரசலந்தா என்னும் [illegible] ருவியாகிய ஜல வர்ணனைத் தரித்தவரே [illegible] (உ௦)

பொன்றுதை யம்புயத் திண்கால னஞ்சிப் புரண்டுவிழ
நின்றுதை யம்புயத் தாண்மறைக் காட னிழல்வெற்பினீ
ரொன்றுதை யம்புயங் கன்வாய் விழுங்கிய தோமணித்தே
ரென்றுதை யம்புயன் மூடிய தோநின் றியம்பிடுமே.

(இ-ள்.) பொன் துதை அம் புயத் திண் காலன் - பொன்னணி பூண்ட அழகிய புயத்தினையுடைய வலிய இயமன், அஞ்சிப்புரண்டு விழ நின்று உதை அம்புயத்தாண் மறைக்காடன் - பயந்து வீழ்ந்துபுரளும்படி நின்று உதைத்த தாமரை மலர்போன்ற திருவடியினையுடைய திருமறைக்காடரது, நிழல்வெற்பினீர் - குளிர்ச்சிபொருந்திய மலையிலுள்ள மங்கையர்களே, உது ஒன்று ஐயம் - இது ஒன்று எனக்குச் சந்தேகமாகின்றது, மணித்தேர் உதையம் என்று புயங்கன் வாய் விழுங்கியதோ - அழகியதேரில் உதயஞ்செய்யும் சூரியனை (க்கேதுவென்னும்) பாம்பு வாயினால் விழுங்கியதோ, புயல் மூடியதோ நின்று இயம்பிடும் ஏ - அல்லது மேகம் மூடி மறைத்ததோ அதனை நின்று ஆராய்ந்து சொல்லுவீராக. (கக)

இயக்கோடை யாம்பன் முசுகுந்த னேத்து மிறைவவண்டு
முயக்கோடை யாம்பன் மலர்மறைக் கான்முத லேசுருதிச்
சயக்கோடை யாம்பன்முத் தேயடி யேன்சட் டகம்விடுநாள்
மயக்கோடை யாம்பன் மருந்தேநின் பார்வை வழங்குதியே.

(இ-ள்.) ஓடை ஆம்பல் இயக்கு முசுகுந்தன் ஏத்தும் இறைவ - முகபடாம் அணிந்த யானையினைச்செலுத்தும் முசுகுந்தச் சக்கிரவர்த்தி துதிக்கும் இறைவரே, ஓடை வண்டு முயக்கு ஆம்பல் மலர் மறைக்கான் முதலே - ஓடைகளில் வண்டுகள் இணைதலையுடைய ஆம்பல் மலர்கள் மலருகின்ற திருமறைக்காட்டு முதல்வரே, சுருதிச் சயக்கோடை ஆம்பல் முத்தே - வேதமாகிய வெற்றிபொருந்திய குதிரையை யுடைய அழகிய ஆம்பலிற்றோன்றிய முத்தாயுள்ளவரே, அடியேன் சட்டகம் [illegible] - உமக்கடிமையாகிய எனது

னங்கள் முட்டையென்றெண்ணி அடைகிடக்கப்பெற்ற திருமறைக் காட்டில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! (கரு)

சங்க மடங்கலை சூழ்மறைக் காடன் றடஞ்சிலம்பிற்
றங்க மடங்கலை யன்னான் புரியுஞ்சொற் சூதையெண்ணேன்
பைங்க மடங்கலை நேரும் புறவடிப் பார்வைதக்கோர்
சிங்க மடங்கலை கற்பாரென் றூர்பொற் சிலைநுதலே.

(இ-ள்.) சங்கம் மடங்கு அலை சூழ் மறைக்காடன் தடஞ்சிலம்பில் - சங்குகள்பொருந்திய மடங்குகின்ற அலைகளையுடைய கடல்சூழ்ந்த திருமறைக்காட்டீசரது அகன்ற மலையினிடத்தே, தங்க மடங்கலை அன்னான் புரியும் சொற்சூதை எண்ணேன் - வலிய சிங்கத்தையொத்த தலைவன் செய்த சொற்சூதினை யான் உற்று நினைத்தேனில்லை, பைங் கமடம் கலை நேரும் புறவடிப் பார்வை - பசுமையான ஆமையையும் கலைமானையும் (முறையே) ஒத்த புறவடியினையும் கண்ணினை யுமுடையவளே, பொன்சிலை நுதலே - அழகிய வில்லையொத்த நுதலை யுடையவளே, தக்கோர் மடம் சிங்கக் கலைகற்பார் என்றூர்-பெரியோர் அறியாமை கெடும்வண்ணம் கலைகளைக்கற்பார் என்று கூறினர்.

(கு-ரை.) அஃது என்னைப்பிரிதற்குப்போலும்' என்பது எஞ்சி நின்றது. இஃது ஓதற்பிரிவிற் றலைவி வருந்தல். (கசு)

சிலைக்கோடு மேல்வைத்த கோற்றே னுடைந்தசெந் தேறல்வ
றலைக்கோடும் வேத வனப்பெரு மான்மலைச் சங்கிதன் [யற்
மூலைக்கோடு பட்ட தழும்பான் சடில முடிமணியாங்
கலைக்கோடு வெண்பிறை யைச்செங்கை கூப்புதி கார்மயிலே.

(இ-ள்.) சிலைக் கோடு மேல் வைத்த கோற்றேன் உடைந்த செந் தேறல்-மலையினது சிகரத்தின்மேல் (ஈக்கள்) வைத்த கொம்புத்தேன் கூடு உடைந்த செவ்வியதேன் ஆனது, வயற்றலைக்கு ஓடும் வேதவனப் பெருமான் - வயலினிடங்களுக்கு ஓடப்பெற்ற திருமறைக்காட்டிறை

வர், மலைச் சங்கரிதன் முலைக்கோடு பட்ட தழும்பான் - பர்வதபுத்திரியாகிய உமாதேவியாரது தனங்களாகிய கொம்புபட்ட தழும்பினையுடைய சிவபெருமான், இவரது. சடிலமுடி மணியாம் - சடாமுடியில் வயிரமணியைப்போல விளங்கும், கலைக்கோடு வெண்பிறையைச் செங்கை கூப்புதி கார்மயிலே - கலைகளையுடைய வளைந்த வெண்மையாகிய பிறைமதியினைச் செவ்விய கை கூப்பித் தொழுவாயாக, கார்காலத்து மயில்போலுஞ் சாயலையுடையாய்!

(து-றை.) இது பிறைதொழுகென்றல். (௬௭)

காரண னுடைத் தலைவேதிகை மறைக் கானப்பரி
பூரண னோமத்த னானவன் வில்லிடம் பொன்வெள்ளிமா
வாரண னோமத்த வாரணங் காத்திடு மாழிப்புவி
பாரண னேமத்த வேணியைத் தாங்கிய பால்விடையே.

(இ-ள்.) காரணன் - உலகத்திற்கு சிருஷ்டிக்காரணராயுள்ளார், தலைமைவேதிகை மறைக்கானப் பரிபூரணன் - தலைமையான யாகவேதிகைகளையுடைய திருமறைக்காட்டிலெழுந்தருளியிருக்கும் பரிபூரணர், ஓம் அத்தம் ஆனவன் - பிரணவப்பொருளானவர், வில் இடமோ பொன் வெள்ளி - இவர்க்கு (முறையே) வில்லும் இருப்பிடமுமாயுள்ளன பொன்மலையும் வெள்ளிமலையுமாம், மாவோ ஆரணம் - குதிரை வேதமாம், ஓம் மத்த வாரணம் காத்திடும் ஆழிப் புவி பாரணனே - (முதலைபிடிக்க) வருந்தும் மதயானையைக் காத்த கடல்சூழ்ந்த உலகினையுண்ட திருமால், மத்த வேணியைத் தாங்கிய பால்விடை ஏ - ஊமத்த மலரைச் சடையிற்றரித்த அச்சிவபெருமானைத் தாங்கிய வெள்ளிய இடபமாம்.

(குறை.) ஓ சிறப்பு, அதனை வினையிடத்துக் கூட்டுக. (௬௮)

பாலம் பகவன் மயிலுரைக் கோவியற் பாவைபங்கன்
ஞாலம் பகவன் மருப்பிளித் தின்றிடு நாரணனுங்
கோலம் பகவனா வின்மறைக் காடன் குருநடச்சடில
மேலம் பகவ னமையான் டருளுவன் மேதக்கவே.

(இ-ள்.) பால் அம்பு அகவல் மயில் உரை கோ இயல் பார்வை பங்கன் - பாலினையும் அம்பினையும் ஆடுகின்ற மயிலினையும் (முறையே)

ஒத்த சொல்லினையும் நண்ணினையும் சாயலினையுமுடைய உமாதேவி யாரைப் பாதித்திருமேனியிலுடையார், ஞாலம் புக வன் மருப்பினிற் றின்றிடும் கோலமாம் நாரணன் பகவன் - பூமியானது பிளக்கும் வண்ணம் வலிய கோட்டினாற் கிழித்த வராகமாகிய திருமாலும் பிரமனும், நவில் மறைக் காடன் - துதிக்கப்பெற்ற திருமறைக்காடர், குரூஉச்சடில மேல் அம் பகவன் - ஒளிபொருந்திய சடையின்மேற் கங்கையைத் தரித்துள்ள சிவபெருமானாகிய பகவான், மேதக - நமை ஆண்டருளுவன் யாம் மேம்பட்டுய்யும்வண்ணம் எம்மை யாண்டருளுவர்

(கு-ரை.) - இது நிரனிறையணி. (௯௯)

தகர நகாமுன் னைந்தெழுத்தர் தறுகண் முகப
புகர நகாத் தரவேழப் போர்வையர் பொங்கனலம்
பகர நகரத்தர் வேதங்கள் பூசித்த பான்மைபெற்ற
சிகர நகரத்த ரெற்களிப் பார்முத்திச் செந்திருவே.

(இ-ள்.) தகர நகரம் முன்னும் ஐந்து எழுத்தர் - நகர எழுத்தை முதலாகப்பெற்ற பஞ்சாக்கரத்தினையுடையார், தறுகண் முகப்புகர நகர் அத்தர வேழப் போர்வையர் - அஞ்சாமையுள்ள முகத்திற் புள்ளியினையுடைய நகர்ந்து செல்லும் அந்த வலிய (கயாசுர னென்னும்) யானையினது தோலினைப் போர்த்தவர், பொங்கு அனல் அம்பகர் - விளங்குகின்ற அக்கினிக்கண்ணினை உடையார், அநகர் - தூய்மையினை யுடையார், அத்தர் - (முதற்) கடவுள், வேதங்கள் பூசித்த பான்மை பெற்ற சிகரநகரத்தர் - வேதங்களாற் பூசிக்கப்பட்ட மாட்சிமைபெற்ற - தலைவர் ஆகிய திருமறைக்காட்டி லெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான், இவர், எற்கு முத்திச் செந்திரு அளிப்பர் - எனக்கு(ப்)முத்தியாகிய பெருஞ்செல்வத்தைக் கொடுத்தருளுவர்.

(கு-ரை.) சிகரநகரத்தர் என்றதில் நகரத்திற்குக் கோயில் என்னும் பொருளுமுண்டெனினும் பதிப்பெயர் கூறவேண்டுவது நியமமாதலின் நகரம் திருமறைக்காடு என்று பொருள் கூறுதலே சிறப்புடைத்தென் றுணர்க. (௧௦௦)

மறைசையந்தாதி மூலமும் உரையும் முற்றிற்று.

உ

சிவமயம்.

மறைசையந்தாதியின்

செய்யுள் முதற்குறிப்பகராதி

மறைசையந்தாதியின் செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

ஸ்ரீ

விளம்பிநாகனார் செய்த

நான்மணிக்கடிகை,

மகாவித்துவான்

கோ. இராஜகோபாலப்பிள்ளையவர்கள்

இயற்றிய

உரையுடன்.

இது

சென்னைப் பச்சையப்பன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியாரால்

பார்வையிடப்பெற்றது.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1914

விலை அணா 5.

ஸ்ரீ

முகவுரை

இவ்வுரையாசிரியராகிய மகாவித்துவான் கோமளபுரம் இராஜகோபாலப்பிள்ளையவர்களின் உரையில், மாணவர்கள் நன்னூல் முதலிய இலக்கணங்களிற் பலநாள் வருந்தி யன்றி யறிதற்கரிய பல அரிய இலக்கண நுட்பங்கள் இருத்தலின், அவர்தம் உரைப்புத்தகங்களை வெளியிடவேண்டும் என்றெழுந்த எனது வேட்கை பெரிதும் சித்திபெறுவதாயிற்று. அவர்தம் உரைப்புத்தகங்களில் என்னால் வெளிவரச் செய்விக்கப்பட்டவை இதனோடு நான்காகும். அவை, நீதிநெறிவிளக்கவுரை, திரிகடுகவுரை, நளவெண்பாவுரை, இந்நான்மணிக்கடிகை யுரையாம்.

இந் நான்மணிக்கடிகையின் "அலைப்பான் பிறவுயிரை" என்னும் இருபத்தாறாவது செய்யுளுக்கு இவ்வுரையாசிரியராகிய பிள்ளையவர்களின் உரை கிடைக்கவில்லை. ஆகையால், அதற்கு மாத்திரம் யான் உரை யெழுதினேன். அச் செய்யுளில் "அலைப்பான் பிறவுயிரை" என்பதைப் பாடமாகவும், 'பிறிதுயிரை' என்பதைப் பாடபேதமாகவும் கொண்டு உரை எழுதப்பட்டிருத்தலின், அதிற் 'பிறிதுயிரை' என்றிருப்பதைப் 'பிறவுயிரை' என்று திருத்திக்கொள்ளுதல் வேண்டும். பிறிதுயிரை என்பதற்கு விசேஷவுரையில் உரையும் இலக்கணமும் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வுரையாசிரியராகிய ஷை பிள்ளையவர்களால் எழுதப்பெற்ற இந்நூலாசிரியர் சரித்திரம் இதன் பின்னாற் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இங்ஙனம் கா. ர. கோ.

ஸ்ரீ

இந்நூலாசிரியர் சரித்திரம்.

நான்மணிக்கடிகையென்னும் நூல் விளம்பிநாகனார் என்னும் புலவர்திலகரால் அருளிச்செய்யப்பட்டது. இவர் இன்ன வருணத்தா ரென்பதும், இன்ன ஊரின ரென்பதும் விளங்காவாயினும் காப்புச் செய்யுளை நோக்குகையில் வைணவ ரென்பது விளங்குகின்றது. இந்நூலுக்குப் பழைய வுரை யொன்றுளது. அதனை நச்சினார்க்கினியார் செய்த வுரை எனக் கூறுவாருமுளர். அவ்வுரையோ கருத்து, சொல் வகை, விசேடமுதலிய உடையதல்லாமையால், அவர் செய்த தன்றென நன்கு விளங்குகின்றது.

இந்நூல் கடைச்சங்க மருவிய நூல். சங்கம்: முதற்சங் கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென மூன்று. அகத்தியம் முதற்சங்கத்தார் காலத்துக்கு முற்படச் செய்யப்பட்டது. தொல்காப்பியம் இடைச்சங்கத்தார் காலத்துச் செய்யப்பட் டது. முதற்சங்கப்புலவர் நாலாயிரத்துநானூற்று நாற்பத் தொன்பதின்மர்; இடைச்சங்கப்புலவர் நானூற்றுநாற்பத் தொன்பதின்பர் என்பதை:—

"'நாலாநா லாயிர நானூற்று நாற்பத்தொன்பான்
பாலாநா னூற்று நாற்பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான் சங்கமரு பத்தரா லாடலுக்கும்
கத்தன் மதுரையிற் சொக்கன்."

என்பதனா லுணர்க.

ஸ்ரீ

நான்மணிக்கடிகையின்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

நான்மணிக்கடிகையின் செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

ஸ்ரீ

நான்மணிக்கடிகை

மூலமும் உரையும்.

நான்கென்னும் வரையறைப் பண்புப் பெயரோடு, சினைத்தற்கிழமைப் பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகப் புணர்ந்து, ஒருசொல்லின் தன்மைப்பட்டு நின்ற மணிக்கடிகை என்னும் பெயர் பண்புத்தொகைநிலைத்தொடராகப் புணர, நிலைமொழியீற்றுயிர்மெய் கெட்டுப் பலசொற்கள் தொக்குநின்ற நான்மணிக்கடிகை என்பது அடியளந்தான், அரவணைச்செல்வன் என்பனபோல ஒருசொல்லின் தன்மைப்பட்டு, இரத்தினத்துண்டம் நான்கினாலமைந்ததோர் அணி எனப் பொருள்பட்டு நிற்றலால் ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்; இவ்வணி தன்னை அறிந்து உயர் பொருளாகக்கொண் டணிந்தாருடலை அழகுபெறச் செய்தல்போலச் செய்வனவுந் தவிர்வனவுமாகக் கூறப்படும் பொருள் நான்கினாலமைந்த செய்யுள் தன்னையறிந்து உறுதிப்பொருளாக மேற்கொண்டாருயிரை அழகுபெறச் செய்தலால் அச்செய்யுளுக்கு உவமையாகுபெயராய், அச்செய்யுளின்பெயர் அது பலதொக்க தொகையாகிய நூலுக்குச் சினையாகுபெயராய் நின்றது. அச்செய்யுள் பலவற்றுல

அமைக்கப்பட்டது நூலாதலால் கருவியாகுபெயரெனினும் ஒக்கும்.

அடியளந்தான் அரவணைச்செல்வன் என்பன அடியளந்தானை, அரவணைச்செல்வனை என உருபேற்றலும், அடியளந்தான் பெரியோன், அரவணைச்செல்வன் உயர்ந்தோன் எனப் பயனிலை கொள்ளலும்போல இந் நான்மணிக்கடிகை என்பது அவ்வாறு உருபேற்றலும், பயனிலைகொள்ளலு மில்லாமையால் அப்பெயர்களை உவமையாகக் கொள்ளல் குற்றமன்றோ எனின், தன்பெயர் நான்மணிக்கடிகை என இப்பெயர் பயனிலையாக நின்றாற்போல இறைவன் அடியளந்தான், தனி முதல்வன், அரவணைச்செல்வன் என அப்பெயர்கள் பயனிலையாக நின்றால் உருபேற்றலும், பயனிலை கொள்ளலும் இல்லையாதலும், இப்பெயர் பயனிலையாகாமல் நின்றபோது, நான்மணிக்கடிகையை முடித்தேன், நான்மணிக்கடிகை முடிந்தது என உருபேற்றலும், பயனிலை கொள்ளலுங் காண்க. நான்மணிக்கடிகை என்பதுபோல அவை பலசொற்கள் தொக்கு ஒருசொல்லின் தன்மைப்பட்டு நின்ற பெயர்களாதலால் உவமையாகக் கொள்ளப்பட்டன என்பதுமறிக. இப்பெற்றியறியாதார் குற்றமெனல் குற்றமென்க. மணிக்குக் கடிகை சினையாவது எவ்வாறெனின், சினைப்பொருளென்பது முதற்பொருளின் ஏகதேசமாதலால் கடிகை மணிக்கு ஏகதேசமா யமைதலின் சினையாமென்க. மரத்தில் கவடு, கோடு, கொம்பு முதலியனபோல மணியில் கடிகை அவ்வாறு தோன்றாமையால் சினையென்றல் பொருந்தாதெனின், அற்றன்று; நையாயிகர் அகண்டகாலம், திக்கு, ஆத்மா,

ஆகாயம், மனம், பரமாணு, அபாவம் இவைபோல நிரவயவப் பொருளெனவும், வேதாந்திகள் ஆத்மா அபாவமென்பனவே நிரவயவப் பொருளெனவும் கொண்டிருக்க, அவற்றின் வேறாய் அவயவியாயுள்ள மணிக்குக் கடிகை அவயவமன்றெனல் பருப்பொரு ளாராய்ச்சியுடையாரது கூற்றென்க. மணிக் கடிகை யென்பதை மணியாகிய கடிகையென உரைத்துப் பண்புத்தொகைநிலைத்தொட ரெனலாகாதோ வெனின், மணியினின்றும் வேறுபடுத்திய கடிகைபோலக் குப்பையினின்றும் வேறுபடுத்திய நெல்லைக் குப்பைநெல்லென்றால் இதனை உறுப்புத்தற்கிழமை யென்னுமல் பண்புத்தொகைநிலைத்தொட ரென்பதுபோலுங் குற்றமாம். இதன் திறம் இன்னும் விரிக்கின் விரியுமாதலால் விடுத்தனம்.

தற்சிறப்புப்பாயிரம்.

கடவுள்வாழ்த்து.

ஐந்தடியான்வந்த பஃறொடை வெண்பா.

மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரொக்கு நிறம்.

(இதன் பதப்பொருள்.) மதி - சந்திரனை, மன்னும் - அழியாத, மாயவன் - விசித்திர சக்தியையுடைய இறைவனது, வாள்முகம் ஒக்கும் - விளக்கமாகிய முகம் ஒத்திருக்கும்; கதிர் சேர்ந்த

ஞாயிறு - கிரணங்கள் நிரம்பிய சூரியனை, சக்கரம் ஒக்கும்-அவனது சுதரிசனமென்னும் சக்கரம் ஒத்திருக்கும்; முது நீர் - நிலைபாயுள்ள நீரையுடைய, பழனத்து - வயலில்முளைத்த, தாளின்-தாளிலிருந்து, எதிர் - மேலெழுந்த, தாமரைமலர் - தாமரைப்பூவை, அவன் கண் ஒக்கும் - அவனது கண்களை ஒத்திருக்கும்; பூவைப் புது மலர்-காயாவினது புதியமலரை, நிறம் ஒக்கும் - அவனது திருமேனி ஒத்திருக்கும், என்றவாறு.

(வி-ரை.) எல்லா நூலுள்ளும் மங்கலமொழி முதல்வருதல் கூறவேண்டுதலால் 'மதி' என்றும், நூற்பெயர்க்கொப்ப, இதனுள் வரும் செய்யுளொவ்வொன்றும் நன்னான்கு பொருளையே கூறுகின்றமைதோன்ற எடுத்துக்கொண்ட நூல் இனிது முடிதற்பொருட்டுச் செய்யும் இக்கடவுள் வாழ்த்திலும் இறைவனுடைய திருமுகமுதலிய நான்கையும் மதிமுதலிய நான்கையும்ஒக்குமென்றுங் கூறினர் விபரீத வுவமை யணியாகக்கொண்டு சந்திரன் இறைவனுடைய முகத்தை ஒக்கும், சூரியன் சக்கரத்தை ஒக்கும், தாமரைமலர் கண்களை ஒக்கும், காயாம்பூ நிறத்தை ஒக்குமென உரைப்பினும் பொருந்தும். நீரென்பதற்கு முது என விசேடணந் தந்தமையால் அதற்கு நிலைநீரெனப் பொருள் சொல்லப்பட்டது. தாளின் என்னும் ஐந்தனுருபு நீங்கற்பொருளது. எதிர் என்னும் வினைத்தொகை மலரென்னும் செய்வதன் பெயரைக்கொண்டது. (௪)

படையை மடியகத் திட்டா னடியினால்
முக்காற் கடந்தான் முழுநில மக்காலத்
தாபனி தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்.

(இ-ள்.) படையை-(அவ்விறைவன் தனது சுதரிசனமென்னும்) ஆயுதத்தை, மடியகத்து - (பாரதப்போரில்) ஒளியின் சிற

மையில், இட்டான் - வைத்தான்; அடியினால் - தனது சிறுபாதங்களி னால், முழு நிலம் - எல்லாவுலகங்களையும், மூக்கால் - மூன்றுமுறை, கடந்தான் - தாவியளந்தான்; அக்காலத்து - இந்திரன் மழை பெய் வித்தகாலத்தில், ஆ பனி-பசுக்களினது நடுக்கத்தை, தாங்கிய-ஏற்றுக் கொள்ள, குன்று எடுத்தான்-கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத் தான்; சோவின் அருமை - (பாணனுடைய) நெருப்புமதிலினது அருமையை, அழித்த மகான் - அழியச்செய்த பெரியான், எ-று.

(வி-ரை.) சுதரிசனத்தை ஒளியின் சிறைமையில் வைத்தது - அருச்சுனன் சயிந்தவனைக் கொல்லும்படிச் சூரியனை மறைக்க அப் படையின் ஒளியை நீக்கி ஏவினது. முழுநிலத்தை மூக்காற் கடந்தது- மாபலியினிடத்து மூன்றடிமண் இரந்து, பூமியையும் சுவர்க்கத்தை யும் தனதிரண்டு சிறுபாதங்களாலும் அளந்து, மற்றோரடிக்கு அவனைப் பாதாளத்திலழுத்தியது. குன்றெடுத்தது - ஆயர்பாடியிலுள்ளார் மகர சங்கிராந்தியில் இந்திரனைக் குறித்து இட்டபொங்கலைத் தானேற் றுக்கொண்டமையால், அவன் கோபங்கொண்டு பெய்வித்த மழை யைக் கோவர்த்தனத்தால் தடுத்தது. சோவினருமை யழித்தது - உஷாகன்னிகையினிடத்திருந்த அநிருத்தனை மீட்கும்படி சென்ற போது அவன் தந்தையாகிய பாணாசுரன் உருத்திரமூர்த்தி முதலிய பரிவாரங்களோடு எதிர்க்கையில் அவர்கள் யாவரையும் முறியடித்து அவனது அக்கினிக் கோட்டையை அழித்தது. 'கோவினருமை யழி த்த மகன்' எனப் பாடமாயின், பொருள்-நப்பின்னைப் பிராட்டிக்காக எழு ரிஷபங்களின் அருமையை யழித்த பெரியானென்பது. மகான் என்பது மகனெனக் குறுக்கலாயிற்று. ஆப்பனி-ஆ பனி எனத்தொ டைநோக்கிப் பகரந் தொகுத்தலாயிற்று. பனி முதனிலைத் தொழிற் பெயர். 'படியை மடியகத்திட்டான்', 'ஆனிரைதாங்கிய' எனவும் பாட முண்டு; முறையே 'பூமியை வயிற்றினுள் வைத்தான்' எனவும், 'பசுக் கூட்டத்தைத் தாங்கும்படி' எனவும் உரைக்க. படியென்றாராயினும்

"ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே"என்பதனால் மற்ற வுலகங்களையுங் கொள்க. மடி-தொழிலடியாகப் பிறந்தபெயர்; மடு-பகுதி, இ-வினைமுதற்பொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி; மடுத்தல்-உண்ணல்; அதாவது தன்னிலடக்கலென்பது. (உ)

நூல்.

எள்ளற்க வென்று மெளியாரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கைம் மேலவா—உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

(இ-ள்) என்றும்-நட்பாகவருங் காலத்திலும், எளியாரென்று-(வலிமுதலியன) குறைந்தவரென்று, எள்ளற்க-(பகைவரை ஒருவன்) இகழாதிருக்கக்கடவன்; என் பெறினும் - சிறந்தபொருளைப் பெறுவதாயிருந்தாலும், கொள்ளார் கை-கொள்ளத்தகாதவருடைய கைகள், மேல ஆ-(தன்கைகளுக்கு) மேற்பட்டன ஆகும்படி, கொள்ளற்க-(அப்பொருளை) இரவாதிருக்கக்கடவன்; உள் சுடினும்-(வறிய குடியிற்பிறந்தார் செய்கை) மனத்தை வருத்தினும், சிறு இல் பிறந்தாரை-அவ்வறியகுடியிற் பிறந்தவரை, சீறற்க சீறாதிருக்கக்கடவன்; கூறு அல்லவற்றை-சொல்லத்தகாத சொற்களை, விரைந்து கூறற்க-(சொல்வதில்) விரைந்து சொல்லாதிருக்கக்கடவன், எ-று.

(வி-ரை.) பகைவரை இகழ்தலாவது நீங்குசெய்யாரெனத் தேறி மகிழ்தல். என்று-வினாவடியாகப்பிறந்த காலப்பெயர்; எ-பகுதி, று-காலப்பொருண்மைவிகுதி, நகரம் சந்தி, அது னகரமானது மெலித்தல் விகாரம். உம்மை முற்றுப்பொருளதாதலால் எகரவினா எஞ்சாமைப்பொருளது. என் என்பது எவனென்பதன் மரூஉ அன்று; இஃதோர் வினாப்பெயர்; இதனொடு பெறினென்பது இரண்டாம்

வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகப் புணர்ந்தது; "என்றானும்" "என்றூர்க்கு" என மூன்றுவதனுருபும், நான்காவதனுருபும் ஏற்று வருதலுங் காண்க. பெரினுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. சிற்றில் என்பதில் சிறுமை வறுமைக்காயிற்று. சொல்லத்தகாத சொற்கள்- பொய், குறளை, வன்சொல், பயனிலாச்சொல். என்னற்க-எதிர்மறை வியங்கோள்வினை; என்-பகுதி, ன்-சந்தி, அல்-எதிர்மறைவிகுதி, அனைத்துமொருபகுதி, க வியங்கோள்விகுதி, லகரம் றகரமானது சந்தி. (௪)

பறைபட வாழா வசுணமா வுள்ளம்
குறைபட வாழார் பெரியோர்—நிறைவனத்து
நெற்பட்டக் கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட வாழாதாஞ் சால்பு.

(இ-ள்) அசுணமா - கேகயப்பறவைகள், பறை பட - பறையி னொலி (செவியில்) பட்டால், வாழா-உயிர்வாழா; பெரியோர்-மிக்க மானமுடையோர், உள்ளம் குறைபட-(மானக்கேட்டால்) தமதுளக் கம் சுருங்கும்படி, வாழார்-உயிர்வாழார்; நிறை வனத்து - (மரங்கள்) அடர்ந்தவனத்தில், வெதிர் - மூங்கில், நெற்பட்டக்கண்ணே - நெல் லுண்டானபோதே, சாம்-அழியும்; சால்பு - (பலநற்குணங்களாலும்) நிறைந்தவன், தனக்கு ஒவ்வாத-தன்னிறைவுக்குத்தகாத, சொல்பட வாழாது - சொல்லுண்டாக உயிர்வாழான், எ-று.

(வி-ரை) அசுணமாவையும், வெதிரையும் பெரியாரோடும், சால்புடையானோடும் வைத்து உடனெண்ணியபடியால் இதுபுகழொப் புமைக் கூட்டமென்னும் அணி. முதல்வாக்கியத்தி னிறுதியிலும், மூன்றும் வாக்கியத்தி னிறுதியிலும் அதுபோல என்னுஞ் சொற் களை இசை யெச்சமாகக்கொண்டு பொருளுரைக்கின் அவ்விரண்டும் முக்கிய வாக்கியங்களாகாமல் உவமைவாக்கியங்க ளாகல்வேண்டும்;

ஆகவே இச்செய்யுள் நான்கு பொருளைக் கூறவந்ததாகாமல் நூற்பய ரோடு முரண இரண்டு பொருளைக் கூறியதாகுமாதலால் குற்ற மென்க. உள்ளம்- ஊக்கம். பட்டக்கண்-இறந்தகால வினையெச்சம்; படு-பகுதி, கண்-இறந்தகால வினையெச்சவிகுதி, அ-சாரியை, பகுதி முற்றியலுகரமாதலால் டகரம் இரட்டியது விரித்தல் விகாரம், உக ரக்கேடும் ககரத்தோற்றமும் சந்தி. வாழாதென்னும் பொருளின் தொழில் சால்பென்னும் அப்பொருளின் பண்பின்மேலேற்றப்பட் டது. ஏ - தேற்றம். ஒவ்வாத என்பது ஒவ்வா என ஈறு தொகுத்த லாய் நின்றது; ஒ - பகுதி (இடைச்சொல்), ஆ - எதிர்மறைவிகுதி, உடம்படு மெய்யாகிய வகரமும், தனிக்குறின் முன்னொற்றாகிய வக ரம் இரட்டிய வகரமும் சந்தி, அனைத்துமொருபகுதி. த்-விரித்தல் விகாரம், அ-பெயரெச்சவிகுதி. 'குறைபட வாழார்உரவோர்'எனவும், 'சொற்பட்டாற் சாவதாஞ் சால்பு' எனவும் பாடமுண்டு. உரவோர் - அறிவுடையோர். (உ)

மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநல மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார் கெட்டறிப
கேளிரா லாய பயன்.

(இ-ள்.) மணி நலம் (காண்பார்)-இரத்தினத்தினது குணத்தை அறியு மியல்பினர், மண்ணி அறிப - கழுவி அறிவார்கள்; மா நலம் (காண்பார்)-குதிரையினது குணத்தை அறியுமியல்பினர், பண் அமை த்து - சேணத்தை (அதன்மேல்) பொருந்தவைத்து, ஏறியபின் - ஏறினபின், அறிப - அறிவார்கள்; பொன்னின் நலம் காண்பார் - பொன்னினது குணத்தை அறியு மியல்பினர், மாசு அற - குற்றம் நீங் கும்படி, சுட்டு அறிப - தீயிற்சுட்டு அறிவார்கள்; கேளிரால்-உறவின ரால், ஆய பயன் (காண்பார்) - உண்டாகும் பயனை அறியும் இயல்பி னர், கெட்டு அறிப - (தமது செல்வம்) கெட அறிவார்கள், எ-று.

(வி - ரை.) காண்பாரென்றும் வினையாலணையும் பெயரை முன்னும் பின்னுங் கூட்டுக; இது இடைநிலைப்பொருட் டீவகவணி; இச் சொல்லில் பகரம் தன்மையை யுணர்த்தியது; இவ்வாறன்றி நிகழ்காலம் இயல்பினும் எதிர்காலமாகவந்த காலவழுவமைதி. யெனினும் ஒக்கும். அறிப பல்லோர் படர்க்கை எதிர்கால வினைமுற்று; இதில் பல்லோர்படர்க்கை எதிர்காலத்தை உணர்த்தியது விகுதியாகிய பகரமாம். ஆப என்பது செல்வங்கெட்டகாலத்துக் கேளிரால் ஆகும்பயன் தோன்றியே விடுமென்றுந் துணிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகவந்த காலவழுவமைதி. பண்ணமைத் தென்றதனுல் மா குதிரைக் காயிற்று. பொன்னுக்கு மாசாவது வெள்ளிமுதலிய உலோகத்தோடு கலந்த குற்றம். கேளிர் - பண்படியாகப்பிறந்த பல்லோர்படர்க்கைப் பெயர்; கேள்-பகுதி, இர்-பல்லோர்படர்க்கைவிகுதி. கெட்டு - கெட என்பதன் திரிபு. பயன் - குறிலிணை மகரவீற்றுமொழியாதலால் மகரத்துக்கு னகரம் போலியாக வந்தது. (௫)

கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்
றெள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி

(இ - ள்.) அகில் - அகிற்கட்டை, கள்ளி வயிற்றின் பிறக்கும் - கள்ளிமரத்தினுள்ளே பிறக்கும்; ஒள் அரிதாரம் - ஒண்மையாகிய அரிதாரம், மான் வயிற்றின் பிறக்கும் - மான் வயிற்றிற் பிறக்கும்; பல் விலைய முத்தம் - மிக்க விலையுள்ள முத்துகள், பெருங்கடலுள் பிறக்கும் - பெருமையாகிய கடலிற் பிறக்கும்; நல் ஆள் - நற்குண நற்செய்கைகளை ஆளுதலுடையான், பிறக்கும் குடி - பிறக்குங் குடியை, அறிவார் யார் - முன் அறியவல்லவர் யாவர் ஒருவருமிலர். எ-று.

(வி - ரை.) அகில் பிறக்கும், நல்லாள் பிறக்கும் என்பன எழுவாய்த் தொகாநிலைத்தொடர்களாதலால் நிலைமொழியீற்று மெய்கள்

இபல்பாயின. அகில் வேறு மரமாயினும் முதிர்ந்த கள்ளியினுள்ளீடு அகிற்கட்டைபோல மணமுடையதாதலால் அதனை 'அகில்' என்றார். இதனைப் "பேய்பிளக்கதொக்க நின்றுலர் பெருங்கள்ளியின், தாய்பிளந் தூக்க காரகில்களும்" எனுஞ் சம்பகாடர் செய்யுளாலு முணர்க. கள்ளி என்றது சதுரக்கள்ளியை; அதனுள்ளிடத்தை வயிறென்றது இலக்கணை. பல் விலைய என்பதில் பல் என்பது குடத்துள்ள நீரைச் சிறிதென்னுமல் சிலவென்பதுபோல மிக்கதென்னும் பொருள்பட வந்ததாதலால் வழக்கென்க. விலைய - பொருளடியாகப் பிறந்த குறிப் புப்பெயரெச்சம்; வில் - பகுதி, ஐ - தொழிற்பெயர் விகுதி, இது பொருளுக்குத் தொழிலாகுபெயராய் நின்றது, இதுவே பகுதி, ய்- சந்தி அ-பெயரெச்சவிகுதி. ஆள் - தொழிலாகுபெயர்; நற்குண நற் செய்கையுடையானை நல்லானென்றது ஓர் குறிப்பு. யார்-யாவரென்ப தன் மரூஉ; "யா அருலகத்தோர் சொல்லில்லார்" என்பதுபோல இது இலரென்னும் பொருளில் வந்தது. (௪)

கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மதம்—மெல்லென்
றருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்.

(இ-ள்.) கதிர் மணி - கிரணங்களையுடைய இரத்தினம், கல்லில் பிறக்கும் - மலையில் பிறக்கும்; உயர் மதம் - மிக்க காமமயக்கம், காதலி - விரும்பப்பட்ட நாயகியினது, சொல்லில் பிறக்கும் - இன் சொல்லிலே பிறக்கும்; அற நெறி - அறம் நடக்கும் வழி, மெல் என்ற - மென்மையான, அருளில் பிறக்கும் - கருணையில் பிறக்கும்; எல்லாம் - (அறமுதலிய) எல்லாம், பொருளில் பிறந்துவிடும் - செல் வப்பொருளில் பிறந்துவிடும், எ-று.

(வி-ரை.) அறமுதலிய ஆவன அறமும். இன்பமும், கருதியது முடித்தலும், மதிப்பும், புகழுமென்பன கல் - கருவியாகுபெயர்.

மெல்லென்ற - இடைச்சொல்லடியாகப் பிறந்த இறந்தகாலப்பெயரெச்சம்; மெல்லென்-பகுதி, ற்-இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்சவிகுதி; இது ஈறுதொகுத்தலாயிற்று; இது பெயர்முதலிய சொற்களை அடுத்தேவரும். பிறந்தவிடும் - எதிர்காலச் செய்புமென்முற்று; பிற-பகுதி, த்-சந்தி, து-சாரியை, விடு-துணிவுப்பொருண்மைவிகுதி, அனைத்து மொருபகுதி, உம் - எதிர்கால முற்றுப்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. (க)

திருவொக்குந் தீதி லொழுக்கம் பெரிய
அறனொக்கு மாற்றி னொழுகல்—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு.

(இ - ள்.) தீது இல் ஒழுக்கம் - (ஒருவர் தம் வருணத்துக்குக்) குற்றம் உண்டாகாத ஒழுக்கம், திரு ஒக்கும் - செல்வத்தை ஒக்கும்; ஆற்றின் - இல்லறவழியில், ஒழுகல் - (தவறாமல்) நடத்தல், பெரிய அறன் ஒக்கும் - சிறந்த துறவறத்தை ஒக்கும்; பிறனைக் கொண்டு - (ஆராயாமல்) பிறனொருவனை நட்புக்கொண்டு, கண்மாறல் - புறங்கூறல், கொலை ஒக்கும் - கொலையை ஒக்கும்; போற்றாதார் முன்னர் செலவு - (ஒரு பயன் பெறவேண்டிப்) பகைவரிடத்துச் செல்லுதல், புலை ஒக்கும் - (கீழானோரது) இழிதன்மையை ஒக்கும், எ-று.

(வி-ரை.) துறவறம் உடம்பினிடத்தும் செல்வத்தினிடத்து முள்ள பற்றை விடுவதாதலால் அதனருமை நோக்கி அதனைப் 'பெரிய அறன்' என்றார் கண்மாறல்-நான்காம் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர்; விரித்தால் கண்ணுக்கு மாறலென விரியும்; பொருள்-ஒருவனுக்கு எதிரில் இன்சொற் கூறிப் புறத்தில் அதற்கு மாறாகக் குற்றங் கூறல் புலை-பண்புப்பெயர்; புல்-பகுதி, ஐ-பகுதிப்பொருள் விகுதி; இவ்விகுதியை வெள்ளை, தொல்லை என்பவற்றிலுங் காண்க.

முன்னர்-பண்புப்பெயர்; முன்-பகுதி, ன் - பகுதிப்பொருள் விகுதி, னகரம் ணகரமானது சந்தி; ஐ விகுதி ஏற்று முன்னை எனவும், அம் விகுதி ஏற்று முன்னம் எனவும், பு விகுதி ஏற்று முன்பு எனவும் வரும். பின்னென்பதும் ஐ விகுதி ஒழிந்த மற்ற விகுதிகளை ஏற்று வரும்; இம் முன்னரென்பது பண்புப்பொருளொழிந்து ஏழாவத னிடப்பொருளாக வந்தது. போற்றார் - பல்லோர்படர்க்கை எதிர் மறை வினையாலணையும் பெயர்; போற்று-பகுதி, (பொருள்-வணங் கல்), ஆ-எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, த் - எழுத்துப்பேறு, ஆர் - பல்லோர் படர்க்கைவிகுதி தகர எழுத் துப்பேறு அச்சொல் உருபேலாதபோதம் வினையாலணையும் பெய ரென்பதற்குச் சிறந்தகுறி என்க. 'பிறனைக் கொலையொக்குங் கொன் றுண்ணுமாற்றல்' எனவும் பாடமுண்டு; பிறனைக் கொன்று - அய லானை வருத்தி, உண்ணும் ஆற்றல் - (அவனிடத்தில் பறித்த பொரு ளால்) சீவனம் பண்ணுகின்ற வல்லமை, கொலை ஒக்கும்-(அவனைக்) கொல்லுதலை ஒக்கும். உண்ணுமென்னும் பெயரெச்சம் ஆற்றலென் னும் கருவிப்பெயர் கொண்டது (௪)

கள்வமென் பார்க்குத் துயிலில்லை காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
காப்பார்க்கு மில்லை துயில்.

(இ - ள்.) கள்வம் என்பார்க்கும் - (பிறர் பொருளைக்) களவு செய்வோமென்று சோர்வு பார்ப்பவருக்கும், துயில் இல்லை-நித்திரை யில்லை; காதலிமாட்டு - விரும்பப்பட்ட காயமினிடத்து, உள்ளம் வைப்பார்க்கும்-உள்ளத்தை (இடைவிடாது) வைப்பவருக்கும், துயில் இல்லை - நித்திரையில்லை; ஒள் பொருள் - ஒள்ளியபொருளை, செய் வம் என்பார்க்கும்-தேடுவோமென்று கருதுவார்க்கும், துயில் இல்லை- நித்திரையில்லை; அப்பொருள் காப்பார்க்கும்-தேடியபொருளைக் (கள்

ளர் கொள்ளாமல்) காப்பவர்க்கும், துயில் இல்லை - நித்திரையில்லை, எ-று.

(வி-ரை.) இக் கால்வருக்குந் துயிலில்லை எனவே அருத்தாபத்தியால் 'கள்வமென்பார்க்குந் துயிலுளது காதலிமாட் டுள்ளம் வைப்பார்க்குந் துயிலுள தொண்பொருள், செய்வ மென்பார்க்குந் துயிலுண் டுறுபொருள், காவலார்க்கு முண்டு துயில்.' என்று கொள்க. கள்வம் - தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று; இதன் முதனிலையடியாகக் கள்ளல், கட்ட, கட்டு, கட்டான் என வினைவிகற்பம் பிறக்கும் துயில் - முதனிலைத் தொழிற்பெயர்; விகுதிபெறின் துயிலல், துயில்கை, துயில்வு, துயிறல் எனவரும். ஒருவனைப் பலருள்ளும் ஒளியுடையவ னாக்குதலால் 'ஒண்பொருள்' என்றார்; இது பண்புத் தொகைநிலைத்தொடர்; விரித்தால் ஒண்மையாகிய பொருளென விரியும். இல்லை - ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாயினும் இங்கு ஒன்றன்பாற் படர்க்கைக் குரியதாய் நின்றது. உம்மை நான்கனுள் முதலிலுள்ளது எதிரதுதழீஇய எச்சவும்மை, ஈற்றிலுள்ளது இறந்ததுதழீஇய எச்சவும்மை; இடையே நின்ற இரண்டில் ஒவ்வொன்றும் முன்னின்றதை நோக்க இறந்ததுதழீஇய எச்சவும்மையும், பின்னின்றதை நோக்க எதிரதுதழீஇய எச்சவும்மையுமாம். (எ)

கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்றா வுறாமுதல் — தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா தெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றா கெடும்.

(இ-ள்.) கற்றார்முன் - (நூல்களைக்) கற்றறிந்தவரிடத்து, கழிவு இரக்கம் - கழிந்தபொருளுக்கு இரங்குதல், தோன்றா - உண்டாகா; காதலித்த ஒன்று - விரும்பப்பட்ட ஒருபொருளை, உற்றார்முன் - தேடத்தொடங்கினாரிடத்து, உறாமுதல் - (அப்பொருள்) கிடையாத

காரணங்கள், தோன்றா - உண்டாகமாட்டா; தெற்றென - தெளிய, அல்ல புரிந்தார்க்கு - தீவினைகளை விரும்பிச் செய்பவர்க்கு, அறம் தோன்றா - அறச்செய்கைகள் தோன்றமாட்டா; வெகுண்டார்முன் - கோபித்தவரிடத்து, எல்லாம் - (பிறர்கூறும்) நன்மைகளெல்லாம், தோன்றா கெடும் - தோன்றாதனவாகிக் கெடும், எ-று.

(வி - ரை.) காதலித்த என்னும் பெயரடியாகப் பிறந்த பெயரெச்சம் ஈறு தொகுத்தலாய் நின்றது. கழிவு - தொழிலாகுபெயர். காரணம் காரியத்தின் முன்புள்ளதாதலால் அதனைப் பண்பாகுபெயரால் 'முதல்' என்றார். ஒன்று-எண்ணலளவை யாகுபெயர். பின்னே அறமென்றமையால் அல்ல என்னும் பண்படியாகப் பிறந்தபெயர் தீவினைக்காயிற்று; இது குறிப்பு வினைப்பெயருமாம்; பொருள் கழியுமுன் பலவகையானும் உபகார முடைமைபற்றி அப்பலவகையுங் கருதி யிரங்குதலால் இரக்கத்தையும், காதலித்த ஒன்றை அடையாமைக்கு இடையூறுகளாகிய ஏதுக்கள் பலவுண்டாதலால் முதலையும் பலவின்பாலாற் கூறினார். முதல் தோன்றாமையாவது - அடைய வேண்டுமென்னும் அவாவால் அவ்வேதுக்களை நினையாமை. அறமாவது-மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கிய ஒழிதலுமே யாயினும் விலக்கியவற்றை அல்ல என முற்கூறினமையின் பின்னே அறமென்றது விதித்தனவற்றை எனக் கொள்க. தெற்றென அல்ல புரிதல் - அறிந்தும் அல்லவற்றைச் செய்தல். ஈற்றில் உள்ள தோன்றாவினைமுற்று வினையெச்சமானது. 'தோன்றாக் கெடும்' எனப் பாடமாயின் தோன்றாதென்னும் வினையெச்சத்தீறு தொகுத்தலெனக் கொள்க. 'உற்றார்முற் றோன்றா வுறுமதி' எனவும், 'உராவுதல்' எனவும் பாடமுண்டு; அவற்றிற்கு முறையே 'துன்பங்களும், கோபித்து உரத்துப் பேசுதலும்' எனப் பொருளுரைக்க; அவை தோன்றாமையாவது விரும்பினபொருளொன்றைத் தேடத் தொடங்கினவர் துன்பங்களை இன்பங்களாகக் கொள்வா

ரென்பதும், பிறர் செய்யும் அவமதிப்புக்குக் கோபங்கொள்ளா ரென்பதும் கருத்தாகக் கொள்க. (௮)

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணிதான்
செல்லு முலகத் தறம்.

(இ - ள்.) நிலத்துக்கு - மருதநிலத்துக்கு. நெல்லும் கரும்பும் - நெற்பயிரையும் கரும்பின் பயிரையும், அணி என்ப - அழகென்று சொல்லுவர்; குளத்துக்குத் தாமரை - குளத்தினுக்குத் தாமரைமலரை, அணி என்ப - அழகென்று சொல்லுவர்; பெண்மை நலத்துக்கு - பெண்தன்மைக்குரிய கற்பாகிய நன்மைக்கு, நாணம் - நாணமுடைமை, அணி என்ப - அழகென்று சொல்லுவர்; தனக்கு அணி - (அக்கற்புடையாளோடு கூடிய) ஒருவனுக்கு அழகாவது, செல்லும் உலகத்தது என்ப - இனிச் செல்லும் உலகத்துக்குத் துணையாகிய அறமென்று சொல்லுவார், எ-று.

(வி-ரை.) நெல்லுங் கரும்பும் அணி என்றமையால் நிலம் மருதநிலத்துக்காயிற்று. நெல் கரும்பு இரண்டும் காரணவாகுபெயர். தாமரை-சாதியொருமை; அது முதலாகுபெயர். பெண்மை - கட்புலனாகியதோர் அமைதித்தன்மை என்பர் நச்சினார்க்கினியார். பெண்மையை முற்கூறியபடியால் தனக்கென்பது ஆண்மகனுக்காயிற்று. உலகத்தது-இடமடியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர்; உலகம்-பகுதி, அத்து, அ-சாரியை, து - ஒன்றன்படர்க்கை விகுதி, பகுதியீற்று மகரக்கேடும், சாரியை முதலீறுகளிலுள்ள அகர உகரக்கேடும் சந்தி; இது செல்லுமென்ற குறிப்பால் அறத்துக்காயிற்று. அழகைத்தருவனவற்றை அழகென்றது காரணத்தைக் காரியமாக்கக் கூறுவதோருபசாரவழக்கு. 'தாமரைப்பெண்மை' எனவும், 'நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணி, தான்செல் லுலகத் தறம்' எனவும் பாடமுண்டு.()

கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம்—கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

(இ-ள்.) களிற்றை - யானையை கந்தின் பிணிப்பர்-(பாகர்கள்) கட்டுத்தறியினாலே தம் வசப்படுத்துவார்; மா நாகம் - சிறந்த சர்ப்பத்தை, கதம் தவிர - அதன் கோபம் நீங்கும்படி, மந்திரத்தால் பிணிப்பர் - (மாந்திரிகர்) மந்திரத்தினால் தம் வசப்படுத்துவார்; கயத்தை - கீழ்மக்களை, கொந்தி (அரசர் ஆயுதங்களால் அவருடலைக்) கொத்தி, இரும்பின் பிணிப்பர் - இருப்பு விலங்கால் தம் வசப்படுத்துவார்; சான்றோரை - (கல்வி யறிவு ஒழுக்கங்களால்) நிறைந்தவரை, நயத்தின் பிணித்துவிடல் (அறிவுடையோர்) இன்சொற்களால் தம் வசப் படுத்திவிடக்கடவர், எ-று.

(வி-கு.) பிணித்தல் - கட்டுதல். இரும்பு-காரணவாகுபெயர். கொந்தி - இறந்தகால வினையெச்சம்; இச்சொல்லைப் பெயர்ச்சொலாகக்கொண்டு கொந்தியிரும் பென்பதனைக் கொந்தியாகிய இருப் பாயுதமெனப் பொருள்பட இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைப் புணர்ச்சியெனக் கொள்ளலுமாம்; கொந்து - பகுதி, இ - கருவிப்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. கயம் - பண்பாகுபெயர்; கயம் - பெருமை; இது கீழ்மக்களுக்கானது வழக்கெனல் நச்சினார்க் கினியார் மதம்; நன்னூலார் மங்கல வழக்கென்பர். ஐந்தனுருபு மூன் றும், மூன்றனுருபொன்றும் கருவிப்பொருளில் வந்தன. 'இரும்பிற் பிணிப்பர் கயவர்ச் சான்றோரை' எனவும் பாடமுண்டு. (௪0)

கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியைக் கொல்லாக் கொளல்வேண்டு மென்றும்
விடல்வேண்டுந் தங்கண் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை.

(இ-ள்.) பிறர் செய்த கடிய - (ஒருவர் தமக்கு) மற்றவர் செய்த அஞ்சத்தக்க தீச்செயல்களில், கன்றாமை வேண்டும் - வயிரங் கொள்ளாதிருத்தலே தகுதி; (பிறர் செய்த) நன்றியை - (தமக்குப்) பிறர் செய்த உபகாரத்தை, கொல்லாது - சிதைக்காமல், கொளல் வேண்டும் - மறவாதிருத்தலே தகுதி; என்றும் - (பிறர்) பொறுக்கக் கூடாத தீங்கு செய்த காலத்தும், தங்கண் வெகுளி - தம்மிடத்துண்டாகும் கோபத்தை, விடல் வேண்டும் - ஒழிதலே தகுதி; ஆக்கம் - (தமது) செல்வத்தை, சிதைக்கும் வினை - கெடுக்குந் தொழிலை, அடல் வேண்டும் - கெடுத்தலே தகுதி, எ-று.

(வி-ரை.) கடிய - உரிச்சொலடியாகப் பிறந்தபெயர்; கடி - பகுதி, ய் - சந்தி, அ - பலவின்படர்க்கை விகுதி; பண்படியாகப் பிறந்த பெயரெனின், அ என்னும் பலவின் படர்க்கை விகுதிப் புணர்ச்சியில் கடுமை என்னும் பகுதி, மை விகுதிகெட்டு, இடை உகரம் இகரமாகி, யகரமாகிய உடம்படுமெய்ச்சந்தி பெற்றதென்க. கொல்லாதென்னும் எதிர்மறை வினையெச்சம் ஈறு தொகுத்தலாய் நின்றது. உம்மை உயர்வு சிறப்போடு முற்றுப்பொருளது. வெகுளி - தொழிற்பெயர்; வெகுள் - பகுதி, இ - புடைபெயர்ச்சிவிகுதி. ஆதற்குக் காரணமாகிய செல்வத்தை ஆக்கமென்றது காரியவாகுபெயர்; தொழிலாகுபெயருமாம்; இயல்பாகிய ஆ என்னும் பகுதி குச்சாரியை பெற்று நின்றமையால் அம் விகுதிப் புணர்ச்சியில் ஆக்கமென விகாரப்பட்டது. வினை - முதனிலைபெறாத தொழிற்பெயர். வேண்டும் - தேற்றப்பொருள் பட்டேவரும் தொழிற்பெயர். 'நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்' எனப் பாடமாயின், 'ஒருவர்செய்த உபகாரத்தை உறுதியாக மனத்தில் கொள்ளுதல் வேண்டும்' என உரைக்க. ([illegible])

முகத்தானேப் செய்வர் மகளிர் முனிவர்
தவத்தாற் றருகுவர் நோய்.

(இ-ள்.) பாம்பு எல்லாம் - எல்லாச்சாதிப் பாம்புகளும், பல்லினால் நோய் செய்யும் - (தீங்குசெய்த பிறரை) விஷப்பல்லால் துன்பஞ்செய்யும்; கொல் ஏறு - கொல்லு மியல்புடைய எருதுகள், குறித்தாரை-(நோய்செய்யக்)குறிக்கப்பட்டவரை, கோட்டால் நோய் செய்யும்-தம் கொம்புகளால் துன்பஞ்செய்யும்; மகளிர் - பெண்கள், ஊடி - பிணங்கி, முகத்தால் நோய் செய்வர் - (தம் கணவரை) முகக் குறியால் துன்பஞ்செய்வர்; முனிவர் - முனிவர்கள், தவத்தால் - தவத்தின் வல்லமையால், நோய் தருகுவர் - (தம்மை அவமதித்தவருக்குத்) துன்பத்தைக் கொடுப்பார், எ-று.

(வி-ரை.) பாம்பு, எருது, மகளிர் செய்யும் நோய்க்கும், முனிவர்செய்யும் நோய்க்கும் வேற்றுமையுள தென்பதும், எல்லாவுயிர்களையும் தம்மோடொக்க நோக்குபவ ரென்பதுந் தோன்றத் தவத்தினுற் செய்குவர் நோயென்னுது 'தவத்தாற் றருகுவர் நோய்' என்றார்; அந்நோய்களோடு இந்நோயிடை வேற்றுமையாவது பாம்புசெய்நோய் மந்திர மருந்துகளாலும், எருதுசெய்நோய் மருந்தினாலும், மகளிர் செய்நோய் இன்சொற் கூறியிரத்தல், வணங்கல்களினாலும் பரிகார முண்மையும், முனிவர்செய் நோய்க்கு அவர்களருளன்றி அவ்வாறு வேறுபரிகார மின்மையுமாம். மகளிர் - பொருளடியாகப் பிறந்தபெயர்; மக - பகுதி, ள் - விகுதி, இரண்டுறுப்பால் முடிந்துநின்ற பெண்பாற் படர்க்கைப்பெயர் பகுதி, இர்-பல்லோர்படர்க்கைவிகுதி; ளகர விகுதி எனக்கொள்ளாமல் அள் விகுதி எனக் கொள்ளின் விகுதி முதல் அகரக்கேடு பெற்றதென்றாவது, பகுதியீற்று அகரக்கேடு பெற்றதென்றாவது கூறலுமாம்; அக்கேட்டை முறையே முதற் குறை, கடைக்குறையெனக. நோய்செய்யு மென்பதை ஒருசொல் போலக் கொள்ளாது நோயைச் செய்யுமென இரண்டாவதை விரிக்

இன் குறித்தாலோர் என்னும் இரண்டாவதைக் குறித்தாருக்கு என நான்காவதாகவாவது, குறித்தாரிடத்து என ஏழாவதாகவாவது திரித்துக்கொள்க. தருகுவரென்பது இடவழுவமைதி, [நன்-பொ-கு-௩௦.] "தால்வால் கொடைசெலவு சாரும் படர்க்கை, எழுவா யிரண்டும் எஞ்சிய ஏற்கும்". 'தொல்கவிறு, கோட்டாளேய் செய்யும்' எனவும் பாடமுண்டு. (௧௨.)

பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரின்
றீர்தலிற் றீப்புகுத னன்று.

(இ-ள்.) பண் அமையா - நரம்பினால்கட்டுதலமையாத, யாழின் - யாழிசையினும், பறை நன்று - பறையோசை நன்மையுடையது; பீடு இல்லாத மாந்தரின் - பெருங்குணமில்லாத ஆடவர் தன்மையினும், நிறை நின்ற-மனத்தைக் கற்புவழியில் நிறுத்தலமைந்த, பெண் நன்று - பெண்தன்மை நன்மையுடையது; பண் அழிந்து-பதனழிந்த உணவுகளை, ஆர்தலின் - உண்ணுதலினும், பசித்தல் - பசியால் வருந்துதல், நன்று - நன்மையுடையது; பசைந்தாரின் - உள்ளன்பு உடையாரினின்றும், தீர்தலின்-நீங்கி உயிர்வாழ்வதினும், தீப்புகுதல் நன்று - தீயில் நுழைதல் நன்மையுடையது, எ-று.

(வி-ரை.) பறை, யாழ் - கருவியாகுபெயர். பெண், நித்திய பருவசனமாகிய மாந்தர் - பொருளாகுபெயர்கள். ஈற்றிலுள்ள பண் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் சமைத்தலால் ஆகும் பதத்துக்கு ஆதலால் காரணவாகுபெயர், தொழிலாகுபெயருமாம். ஐந்தனுருபு நான்கும் எல்லைப்பொருளன. பசைந்தாரினென்னும் ஐந்தனுருபு நீங்கற்பொருளது. பெருங்குணம்-செய்தற்கரியவற்றைச் செய்தல், கருவமில்லாமை, பிறர்குற்றங் கூறாமை முதலிய நற்குணம். நன்று

நான்கும் பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று; மை யீறுகெட்டு நின்ற நல்-பகுதி, று - ஒன்றன்படர்க்கைவிகுதி, பகுதியீற்று லகரம் றகரமாகத் திரிந்தது சந்தி, அது னகரமானது மெலித்தல் விகாரம்; இங்கு நன்மை இன்பமெனக் கொள்க. நிறை - தொழிற் பெயர்; நிறு - பகுதி, ஐ - புடைபெயர்ச்சிவிகுதி, உகரக்கேடுசந்தி. நில் என்னுந் தன்வினைப்பகுதியை பிறவினைப் பகுதியாக்கியது றவ் விகுதி என்க. நிறைநின்ற - எழுவாய்த் தொகாநிலைத்தொடராகக் கொள்ளுதலே அன்றி, நிறையில் நின்ற எனப் பொருள்கொண்டு ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகக்கொள்ளினும்பொருந்தும். (௧௯)

வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழாம்
இன்சொற் குழியு ளினிதெழூஉம் வன்சொலாம்
காவெழூஉங் கண்ணில் குழியு ளிரவெழூஉம்
இன்மைக் குழியுள் விரைந்து.

(இ - ள்.) வண்மை - ஈகையாகியபயிர், வளப்பாத்தியுள் வளரும் - (நல்லோருடைய) செல்வமாகிய பாத்தியில் வளரும்; கிளைக் குழாம் - சுற்றத்தின் கூட்டமாகிய பயிர், இன்சொல் குழியுள் - இன்சொல்லாகிய பாத்தியில், இனிது எழும் - இடையூறில்லாமல் வளரும்; வன் சொல் ஆம் கா - கடுஞ்சொல்லாகிய சோலை, கண் இல் குழியுள் - கண்ணோட்ட மின்மையாகிய விளைநிலத்தில், எழும்-வளரும்; இரவு - இரத்தலாகிய பயிர், இன்மைக் குழியுள்-வறுமையாகிய பாத்தியில், விரைந்து எழும் - விரைவாக வளரும், எ-று.

(வி - ரை.) மூன்றாவது வாக்கியந்தவிர மற்ற மூன்று வாக்கியமும் ஏகதேசவுருவகவணி. உணவுமுதலியன பெற்றே உயிர்வாழ வேண்டுதலால் 'இரவு விரைந்தெழும்' என்றார். பொருளுடைய செல்வனிடத்து உணவும், இன்சொல் கூறுவானிடத்துப் பலருமுறவாத

னும், நாட்சிணியமில்லாதவனிடத்துக் கடுஞ்சொற்பிறத்தலும், வறியானிடத்து இரத்தற்றொழிலும் உள்ளன ஆமென்பது கருத்தாகக் கொள்க. விளை-உவமையாகுபெயர். விளைக்குழாம்-ஒன்றன்கூட்டத் தற்கிழமைப்பொருளதாகிய ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். கண் தனது தொழிலாகிய ஒடுதலுக்கானது காரணவாகுபெயர்; அது தான் சென்றபோது அவனோடு பழகினவர் சொல்லியவற்றை மறக்கமாட்டாத தன்மைக்கானதும் அவ்வாகுபெயரே ஆம். கண் இல் எழுவாய்த் தொகாநிலைத்தொடராயினும் ஒருசொல்போலநிற்க, இதனோடு குழி என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத் தொடராகப் புணர்ந்தது; உருவகமாதலால் இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடரென்றாம். 'வன்சொற்,கரவெழுங் கண்ணில் குழியின்' எனவும் பாடமுண்டு; பொருள்: 'வல் சொல்-கடுஞ்சொல்லால், கரவு - (உடையானாயிருந்தும்) இல்லையென மறக்கும் பயிர், கண் இல்-தாட்சிணிய மின்மையாகிய, குழியின்-பாத்தியில், எழும்-வளரும்' என வுரைக்க. (௧௪)

இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக தன்னோடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

(இ-ள்.) இன்னாமை வேண்டின் - (ஒருவன்) இழிவை விரும்புவானானால், இரவு எழுக-(மானங்கெடவரும்) இரத்தலுண்டாகக்கடவன்; இந்நிலத்து - இவ்வுலகில், மன்னுதல் வேண்டின் - தான் நிலைபெறுதலை விரும்புவானானால், இசை நடுக - புகழை நாட்டக்கடவன்; தன்னோடு செல்வது வேண்டின் - (மறுமைக்குத்) தன்னுடனே செல்லுந் துணையாகுவதனை விரும்புவானானால், அறம் செய்க-அறத்தைச் செய்யக்கடவன்; வெல்வது வேண்டின் - (தீய சிந்தைகளை)